


காங்கோ நதி அமைதியிழந்து குருதிக்கறையுடன் காட்சியளித்தது. காலா காலமாக கரைகளை செழிப்பித்து ஓடிக்கொண்டிருந்த காங்கோ நதி தாயகத்து மக்களின் செங்குருதியால் செவ்வாடை புனைந்து காணப்பட்டாள். எங்கள் மூச்செல்லாம் விடுதலைக்கே என்று எக்காளமிட்ட காங்கோலியர்களின் தன்மானம் அந்த புனித மண்ணிலே வீழ்த்தப்பட்டது. ஆம்! நூற்றாண்டுகளாக இருளிலே அல்லலுற்றவர்கள் கையில் கிடைத்த அகல் விளக்கை காப்பாற்றும் முயற்சியில் ஏகாதிபத்தியங்களாலும் அவர்களுடைய கையாட்களாலும், ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கப்பட்டனர். அந்த செல்வச் சுரங்கமெங்கும் இரத்த வாடை வீசியது.

எங்கும் துக்கம் தோய்ந்து காணப்பட்டது. பார்க்குமிடமெல்லாம்மயான மோனம் தேங்கிக் கிடந்தது. தன் குழந்தைகளின் சடலங்களைக் கண்டு கண்டு தாய் அழுவதைக் கூட நிறுத்தி விட்டாள் போலிருக்கிறது. இப்பொழுது அவளுக்கு 'திகைப்பு' பிடித்திருக்கிறது! ஆம் திகைப்பு!!

அதோ, காங்கோவின் மாமலைகள் தென்படுகின்றன. பழைய மிடுக்கிற்கும், பெருமைக்கும் திரும்ப இன்னும் எத்தனை நாள்? ஏகாதிபத்தியக் கையாட்களின் எக்காளத் திருவிளையாடல்களை கண்டு மலைத்துப் போய் விட்டனவா? அல்லது அவர்களைத்தீர்த்துக்கட்ட, நேரம் பார்த்து வெடிக்கப் போகிறதா?

இதோ அந்தக் கானகங்களைப் பாருங்கள்... அதில் ஒரு அசைவு கூடக் காணோமே!... கூட்டம் கூட்டமாக நிற்கும் சிங்கங்களும், பாம்புகளும், யானைகளும, சிறுத்தைகள். புலிகள், கரடிகள், அனைத்தும் மூச்சடைத்துப் போய் விட்டனவா? அவைகளில் ஒன்றுகூடகத்தவில்லை! கர்ச்சிக்கவில்லை!! ஏன்?...ஏன்?...

கருப்பர் மண்ணிலே நடக்கும் இந்த காட்டுத்தனத்தைக் காணச் சகியாது கதிரோன் மாமலைகளுக்குப்பின்னால் மறைந்ததும், விண்மதி வேதனையுடன், துக்கப் பயணம் துவக்கியது. ஆனால் அந்த இன்னிசைக் கிளிகளின் மழலைகீதங்கள் மட்டும், ஏன் இன்னும் ஒலிக்கக் காணோம்? மரக் கிளைகளிலமர்ந்து, அவைகள் வழக்கமாக காங்கோவின் இயற்கையழகை வாழ்த்திப் பாடுவது, ஒரு கடந்த கால நிகழ்ச்சியாகி விட்டதே! அந்த கிளிகள் இன்னும் உயிருடன் தானிருக்கின்றன. ஆனால் அவைகளின் குரலினிமை வற்றிப் போய்விட்டது. காங்கோவின் காதுகள் செவிடாக்கப்பட்டு விட்டன. பின் யாருக்காக அவைகள் பாடவேண்டும்?

திடீரென்று இனிமையான ஒரு

ந்து வந்தது ஆகா... எத்துணை இனிமையான பாட
ஒவ்வொரு பொருளும், வேதனையால் விம்மி நிற்கி
பொழுது இந்த அழகுப்பாடல் ஒலிக்கக் காரண
அந்த மதுரகீதம் மெல்ல, மெல்ல கீழிறங்கி உ
னங்கள் அத்தனையையும், ஏன் ஒவ்வொரு
பூண்டையும் மெய்மறக்கச் செய்கிறதே.


ஆம்.. காங்கோவின் பாட்டு இன்னும் முடியவில்
அமுத கீத ... மென அ
ஒலித் துக் ... கொண்டே
ருக்கிறது.

## ✱ கேரளக் கதை

* * *

பாடல் எங்கிருந்து கிளம்புகிறது? அதை இ
பவர்கள் யார்? ஒரு தாய்க்குத்தான், அவ்வளவு
மையாக, கருத்தாழத்துடன், அந்தச் சந்தத்தில்
துடியும். அப்படியென்றால் அந்தப் பாடலைப் பாடியது யார்? பாந்த இன் குரலின் சொந்தக்காரர்கள் யாராக இருப்பார்கள்.

காங்கோவின் நாட்டியப் பேராசியான, அழகுக் கலையரசியான எழில்மயில் ஹெக்டீனுதான் அந்தக் குரலின் சொந்தக்காரி ... அந்த இனியகீதத்தை அவள் தான்பாடினாள். "என் இதய மலரே, உன்னை கிள்ளியெடுத்து இதோ இந்த பூந்





# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி 1 | 17-3-61 | சுடர் 2

படுக்க வைத்திருக்கிறேன். என் உயிருக்குயிரான பேரானந்தமே! உன்னிடமிருந்து ஒரு துளியை எடுத்து ஒரு குழந்தையின் உருவாக்கி இதோ இந்த மணி மஞ்சத்தில் படுக்க வைத்திருக்கிறேன். ஒவ்வொரு மயிர்க்கால்களாலும் நான் இந்த பேரமுதைப் பருகிப் பருகி பெருமகிழ்வின் எல்லைக்கு இதோ மயங்கி மயங்கிச் செல்கிறேன்" இதுதான் அந்தப் பாடலின் பொருள்.

காங்கோ தலைநகரிலிருந்து ஏறக்குறைய இரண்டு மைல் தொலைவில் மேற்குப்புறமாக அரச பாட்டையின் அருகில் அவளுடைய அழகு மாளிகை நிற்கிறது. அந்த இரண்டடுக்கு மாளிகையைச் சுற்றும் ஓராள் உயரத்தில் மதிற் சுவர் எழுப்பப்பட்டிருந்தது. சர்குனே, சிறு மரங்கள் தங்கள் கிளைக் கரங்களால் மாளிகையைத் தழுவிக் கொண்டிருந்தன. இள நீல மும்[?] கடுஞ் சிவப்பும் கலந்த பூங்குலைகள் காற்றில் அசைந்து கொண்டிருந்தன.

மீண்டும் அந்தப் பாடல், இனிமையான, அந்த தாலாட்டுப் பாடல், ஒலிக்கத் துவங்கியது. கீழடுக்கிலிருக்கும், நடு அறையிலிருந்து அது ஒலித்துக்கொண்டிருந்தது. அந்தப் பாடல் ஒரு வண்ணத்திப் பூச்சியைப்போல் மெதுவாக வானிடை காற்றில் தவழ்ந்துகொண்டிருந்தது. தொட்டிலைச் சுற்றிப் பல வண்ண மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. காங்கோவின் நடன மயில் நாட்டியப் பேரரசி, ஹெக்டீனு மென் குரலில் பாடிய வாறு தொட்டிலை ஆட்டிவிட்டு மெய் மறந்திருந்தாள்.

ஒன்றரை யாண்டுகளுக்குமுன் அவளைக் காங்கோவின் ஒரு செல்வச் சீமானின் குமாரன் திருமணம் புரிந்துகொண்டான். அந்த திருமணத்திற்குப் பிறகு அவள் நிகழ்ச்சிகளுக்கு ஒப்புக் கொள்வதேயில்லை. தன்னுடைய அனைத்தையும் குடும்ப வாழ்க்கைக்கு ஏகபோக மாக்கினாள். அவள் இப்பொழுது இனிமையாகப் பாடியதும், 'ஜிராப்' நாட்டியத்தைப் போல் அசைந்ததும், குழந்தையை மகிழ்விக்கத்தான். ஆனால் அதை உண்மையிலே அவளுடைய கணவர்தான் ரசித்துக்கொண்டிருந்தார். அவர் கட்டிலில் கைகளை ஊன்றியவாறுபடுத்துக் கொண்டிருந்தார்.

"டும். டும்"

மூடிய கதவில் யாரோ தட்டுகின்ற ஓசை!...

தம்பதிகள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர்.

மீண்டும் "டும், டும்" என்று தொடர்ச்சியாக தட்டும் ஓசை கேட்டுக் கொண்டேயிருந்தது.

"நாட்டியப் பேரரசியார் இருக்கிறாரா?...இல்லையா ?

கேள்வியில் கொஞ்சம் கிண்டல் கலந்திருக்கிறதா என்ற சந்தேகம்!

அவள் கதவைத் திறந்தாள்.

கர்னல் மொபுட்டுவின் வலுக்கரமான காப்டன் பண்டேடு நின்று கொண்டிருந்தான். அடுத்த கணம் உள்ளே நுழைந்த காப்டனின் கழுகுக் கண்கள் அறையில் ஒரு அலட்சியப் பார்வையை உதிர்த்தன... அச்சத்துடன் அவள் கணவன் அவனுக்கு வணக்கம் செலுத்தினான். பதிலுக்கு ஒரு ஏளனச் சிரிப்பு.!

"காப்டன்!...ஏன் - என்ன விசேஷம். நீர் மிகவும் களைத்துப்




போய்விட்டீரே, எங்களால் என்ன ஆகவேண்டுமோ?"

உள்ளேயிருந்த படபடப்பை வெளிக்குக் காட்டாமல் ஹெக்டீனு கூறினாள்...பிறகு உபசரிக்கும் தோரணையில் "நின்றுகொண்டிருக்கிறீர்களே, உட்காருங்கள்" என்று இருக்கையைச் சுட்டிக் காட்டினாள்.

"ஹெக்டீனு!...உட்கார நேரமில்லை. எனக்கு இப்பொழுதே கர்னலைச் சந்திக்கவேண்டும். நாங்கள் ஒரு அரிய வேட்டையை முடித்துக் கொண்டு வருகிறோம். ஆனால் நாங்கள் குறிவைத்த மிருகம். தவறு!! தவறு!!...மிருகங்கள் கிடைக்கவில்லை...ஆனால் ஏமாற்றப்பட்டோமா என்றால்—அதுவுமில்லை. "காப்டன் கூறினான்.

"வேட்டை எங்கு நடந்தது. ஏதாவது கிடைத்ததா?"

ஹெக்டீனு கேட்டாள்.

"பின் என்ன நினைத்தாய்?... காப்டன் பண்டேடா எப்பொழுதாவது வெற்றுக்கையுடன் திரும்பியிருக்கின்றானா? நாங்கள்வேட்டையாடநினைத்தது லுமும்பாவின் மூத்த சகோதரியையும். அவளுடைய கணவனையும்தான். ஆனால் நாங்கள் அங்கு செல்வதற்குமுன் அவர்கள் யாருடைய அழைப்பிற்கிணங்கவோ அங்கிருந்து இடம் பெயர்ந்து விட்டனர். அங்கு இருபது லுமும்பிஸ்ட் படையினர் காவலிருந்தனர். அவர்களில் பதினெழு பேர்களை நாங்கள் தீர்த்துக்கட்டினோம். அடுத்து நாங்கள் அந்த வீட்டை சோதனையிட்டதும், "இந்த மூன்றும்" கிடைத்தன. லுமும்பாவின் சகோதரிதான் கிடைக்கவில்லை. அவளுக்குப்பதில் அவள் பெற்றெடுத்த இந்த மூன்றும் எங்களிடம் சிக்கிக் கொண்டன! இவைகளை உடனே கர்னலுக்கு காணிக்கையாக எடுத்துச் சென்றோம். இதில் மூத்தவள் திருமணமானவள் என்று தெரிந்ததும் கர்னல் அவளைச் சிப்பாய்களிடம் ஒப்படைத்தார்...அதை அவர்கள் அனுபவிக்கட்டுமென்று. மீதமுள்ள இரண்டும் மணம் பரப்பும் பருவத்தில்மலரத்துடிப்பவை என்பதைக்கண்டதும் கர்னல் மொபுட்டுவின் மயிர்க்கால்களெல்லாம் எழுந்து நின்றன. உடனே அவர் என்னை அழைத்து "இவர்களிருவரையும், நாட்டிய ராணி ஹெக்டீனுவிடம் அழைத்துச் சென்றுஎனக்காக இவர்களை சிங்காரித்து தயாராக வைத்திருக்கச் சொல் நான் உடனே வந்துவிடுகிறேன் என்று சொல்லச் சொன்னார் இது கர்னல்மொபுடுவின் கட்டளை நான் அவர்களை அழைத்து வந்திருக்கிறேன். இன்னும் சில மணி நேரத்தில் அவர் இங்கு வரப்போகிறார். இருபத்தேழு லுமும்பிஸ்டுகளின் தலையைச்சீவி, ஈட்டி முனையில் கோர்த்து நிறுத்தும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. காலை பத்து மணியிலிருந்து இந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. மீதமுள்ளதை உடனே முடித்துக்கொண்டு கர்னல் சீக்கிரம் வந்து விடுவார். பொருளைப் பெற்றுக்கொண்டு ரசீது தாருங்கள்" காப்டன் கூறினார்

"திருமணத்திற்குப் பிறகு நான் யாரையும் என்னுடைய விருந்தினராகச் சேர்த்துக் கொள்வதில்லை. இது கர்னலுக்கே நன்கு தெரிந்த செய்தி அவ்விதமிருக்க, இந்த இழவுகளை இங்கே கொண்டு வந்ததற்கும், அவர் வரப்போவதும் எதற்காகவென்று எனக்குப்புரியவில்லை" ஹெக்டீனு கூறினாள்.

"கர்னலின் உள்ளக்கிடக்கைக்குமுன், திருமணம், கணவன், தாய் சேய், தகப்பன், அத்தனையும், துச்சமென்பது தாங்கள் அறியாததல்ல. அது கிடக்கட்டும் கட்டளைக்கு கீழ்ப்படிகிறீர்களா இல்லை? மறுக்கிறீர்களா? அதைக்கூறுங்கள். இன்றுஉங்களுடையபடுக்கையில் கர்னலுக்கு இன்பப்படையல், படைப்பவர்கள் அந்தஇளமொட்டுகளே தவிர, நீங்களல்ல... உங்கள் பதட்டம் தேவையற்றது. காப்டன் கூறினான்.

"கர்னலுக்கு எத்தனையோ மாளிகைகள் இருக்கின்றன. அதில ஏதாவதொன்றில் இவற்றைக் கொண்டுபோய் தொலைக்கக் கூடாதா?. என் அறைக்குள்ளேயே இந்த..." ஹெக்டீனு முடிமிக்கவில்லை.

"வேறு இடம் கிடைக்காததால் அல்ல. உங்கள் அந்தப் புரத்திற்கு ஏதோ மகத்துவம் இருக்கும் போலிருக்கிறது. அது அவருக்குத்தான் தெரியும்" காப்டன் இப்படிக் கூறிவிட்டு பின்னால் தன் பார்வையைவிடுத்தார். நான்கு பட்டாளக் காரர்களுக்கு மத்தியில் இரண்டு யுவதிகள் நின்று கொண்டிருந்தனர். ஒருத்திக்குபதினைறுவயது. இன்னொருத்திக்கு பதினெட்டு வயது. காப்டன் சைகை காட்டியதும் அவர்கள் உள்ளே நுழைந்தனர். ஹெக்டீனு இருவரையும் மாறி மாறி நோக்கினாள். ஒருவேடனின் முன் எதுவுமறியாது கள்ளங்கபடமற்று நிற்கும் இரண்டு பச்சைக் கிளிகளின் முகபாவம், அவர்கள் முகத்தில் நிழலாடியது. "அப்படியானால் நான் போகிறேன், கர்னலை உடன் அழைத்துக் கொண்டு வருகிறேன். எல்லாம் பத்திரம். பத்திரம்!..." என்று கூறிவிட்டு அவன் நடந்தான். திடீரென்று வெளியேயிருந்து ஒரு அழுகுரல் கேட்டது "அய்யோ' அம்மா!! இவர்கள் என்னைச் சாகடிக்கிறார்கள்!!" ஹெக்டீனுவும், கணவனும் காப்டனை நோக்கினார்கள்.

"ஓ! பரவாயில்லை. வாசலில், இவர்களுடைய மூத்த சகோதரியுடன் ராணுவத்தினர். காதல் லீலைபுரிகிறார்கள்போலிருக்கிறது. முட்டாள்கள் அவர்கள்கிடக்கிறார்கள். நீங்கள், போய் ஆகவேண்டியதைக் கவனியுங்கள். "ஹெக்டீனு மெதுவாக ஒருசெடியின்மீது ஏறிநின்று, வெளியே என்ன நடக்கிறது என்று கவனித்தாள். ஏறத்தாழஇருபது பட்டாளக்காரர்கள் புடைசூழ ஒரு உயிர் அசைவற்றுக்கிடந்தது. மெல்லிய மூச்சின் அடையாள மட்டும் தெரிந்து கொண்டிருந்தது.

ராணுவத்தினர் காப்டனைக் கண்டதும் தாங்கள் செய்ய வேண்டிய வேலையைச் செவ்வனே செய்துவிட்ட பெருமையுடன் தலை வணங்கினார்கள். இப்பொழுது ஹெக்டீனு, காப்டனின் டார்ச் லைட்டிலிருந்து கிளம்பிய ஒளியின்மூலம் எல்லாவற்றையும் நன்கு பார்க்கமுடிந்தது. இரத்தத்தில் மிதந்து, நிர்வாணநிலையில், ஒரு பெண் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தாள்.

"இவளைக் கொண்டு போய் காங்கோ நதியில் எறிந்துவிடுங்கள் காப்டனின் கட்டளை.

ஹெக்டீனு நடு நடுங்கிவிட்டாள். கீழே விழாமலிருக்க அவள் மிக சாக்கிரதையாக இறங்கவேண்டியிருந்தது. அவளுடையகண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்து கொண்டிருந்தது.

* * *

(5-ம் பக்கம் பார்க்க)

காங்கோவைப் பற்றிய சோகச் செய்திகள், தினசரி வருகின்றன. அதனைமையமாக வைத்து, மலையாள எழுத்து மன்னர் திரு: முன்ஷிபரமுப்பிள்ளை [மணமகள் திரைப்பட மூலக்கதை ஆசிரியர்] அவர்கள், தீட்டிய நெஞ்சுருக்கும் கதை, இது தமிழில், இதனைத்தருபவர், எமது நண்பர் தோழர். வி. கே. பாலகிருட்டினன். இக்கதையில் வரும் தியாகி லுமும்பா, கொடுமையாளன் மொபுடு முதலியவர்களைப்பற்றி ஆசிரியர் தீட்டும் அரிய கட்டுரை, அடுத்த இதழில் வர இருக்கிறது.........

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி 1 வெள்ளி 17—3—61 கதிர் 2

# புதிய ஆராய்ச்சி !

“கிராமங்களில் உள்ள மக்கள் நகரங்களில் குடியேறுவது என்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அறிகுறிதான்”

* * *

சென்ற 8ந்தேதி, தமிழகச்சட்ட மன்றத்திலே, இந்தப் பதிலே, பொறுப்புள்ள அமைச்சர், சுப்ரமணியம் தந்திருக்கிறார், அறிஞர் அண்ணா கேட்ட கேள்விக்கு.

நாட்டுப்புற மக்கள் நகரங்களை நோக்கிவந்து குடியேறுவது, நல்ல அறிகுறியாம், பொருளாதார வளர்ச்சிக்கு! அன்பர் சுப்ரமணியம், அகவிலையின் தன்மையை அறிய, அங்காடிக்குப்போனாராம் முன்பொருமுறை. அதைப்போல, சென்னை மாநகரத்தின், வீதிகளை நோக்கி, வலம்வரவேண்டுமென விரும்பி அழைக்கிறோம். துறைமுகத்தில், துப்பாக்கிக் குண்டுக்கு அடிப்பட்டுச் சாவோரும், கூவம் நதியோரம் குடிசை அமைத்துக்கொண்டு சாக்கடையோடு சாக்கடையாய்க் கிடப்போரும், “சாமீ ரிக்ஷா!” என்று மனிதனைப் பார்த்துச் சாமி என்றாலாவது இரண்டணா நாலணா கிடைக்காதா என்று இடுப்பொடிய ரிக்ஷா இழுப்போரும், மூட்டை தூக்கிடும் முனியனும் கந்தனும், ஆண்டாண்டுகாலமாகச் சென்னையிலே வசிப்பவர்கள், அல்ல. போனமாதம் வந்தேன், வந்து இரண்டு ஆண்டாயிற்று என்று சொல்லும், நாட்டுப்புறத்து மக்கள்தான். வழியோரமும், வாய்க்கால் ஓரமுமாக, குடியிருந்துகொண்டு, கும்பி கழுவப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் சென்னையில். கோணல் விழுந்தமுதுகும், ஒளியிழந்த கண்களுமுடைய, அவர்கள் எல்லாம், இருந்த வீடுகளை விட்டு, ஏன் வந்தனர் சென்னைக்கு? வாழ! வேலை கிடைத்து வாழலாம் எனும் ஆசையால்!! அவர்கள் அப்படி வந்தது, பொருளாதார வளர்ச்சியின் அறிகுறியாம், புகல்கிறார், சுப்ரமணியனார்.

நகரமும், கிராமமும், நாம் வாழும் நாட்டின் பகுதிகள்தான் என்றாலும்—பட்டினத்தின் பகட்டு, பலரை, கிராமங்களைவிட்டு, நகரத்துக்கு வரச் சொல்கிறது! இப்படி வருவது கிராமவாழ்க்கையின் மூலாதாரத்தைக் குலைக்கும், உழவுத் தொழிலைப் பாதிக்கும், சுகாதார நிலையைக் கெடுக்கும், உண்மையில் நாடு என்பது கிராமங்கள்தான் என்று, காந்தியடிகள் கண்டார். அதனாலேயே, ‘கிராம ராஜ்யம்’ “பஞ்சாயத்து ஆட்சிமுறை”, “அதிகாரங்கள் பஞ்சாயத்துகளுக்கு வேண்டும்”, என்கிற மூலமுழக்கங்களை, தன்னுடைய தாரகமந்திரங்களாகக் கொண்டு, வாழ்ந்தார். அவர் சொன்ன கொள்கைகளை, காங்கிரசும் மறுக்காமல், “கிராமங்களையும் நகரங்களைப்போல ஆக்குவதே, எம்கொள்கை. நகரமக்களுக்குக் கிடைக்கும் எல்லா வசதிகளும் நாட்டுப்புறமக்களுக்கும் கிடைக்கச் செய்வதற்காகவே, ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு நடத்தி வருகிறோம்,” என்கிறது. அடிகள் வினோபாவேயும், “உண்மையான இருதயமும் ஒற்றுமையும் கிராமத்தில்தான் இருக்கிறது. நகரம், என்பது பிசாசு! கிராமம் என்பது தேவதை! தேவதைக்குச் சூடன் காட்டாமல் பிசாசை வணங்கப்போவது, பிசகு”, என்று போகுமிடமெங்கும், போதிக்கிறார். அந்தப்போதனையைக் கேட்க, “சர்வோதய மாநாடு”கள் போட, சர்க்காரை நடத்தும் அமைச்சர்களே, சகலவிதமான ஏற்பாடுகளையும் செய்கிறார்கள்—வினோபாவின் கருத்துக்கள், கிராம மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தும் என்ற எண்ணத்தில்! காந்தியப் பொருளாதாரத்தின் சின்னமெனக் கருதப்பட்ட மறைந்த அறிஞர் ஜே. சி. குமரப்பா, “கிராமப் பொருளாதாரம் செம்மைப்பட்டால்தான் நாடுவாழும். பொருளாதாரம் செம்மைப்பட வழிகளும், தொழில்களும் உள்ளன என்று சொன்னால்தான்,” நாகரீகப் பகட்டால் மின்னும் நகரங்களை நோக்கி மக்கள் செல்லமாட்டார்கள்,” எனும் கருத்தில் கிராமக்கைத்தொழில்களை ஆதரித்து வளர்க்கவேண்டும், கோழிவளர்ப்பு—செக்கு ஆட்டுதல்—வெல்லம் காய்ச்சுதல்—போன்றவையே அத்தொழில்கள், என்று, ஆதாரப்பூர்வங்களோடு வலியுறுத்திவந்தார். அதனை, காங்கிரசு அரசும், இன்று அமுல்நடத்த எத்தனையோவித முயற்சிகள் எடுத்தும் வருகின்றது!!

இந்த முயற்சிகளின் மூலநோக்கமே, நாட்டுப்புறமக்கள் நாகரீக மோகத்துக்கு ஆட்பட்டும், வாழமுடியாததால் வேலைதேடியும், நகரத்துக்குப்போகாமல், தத்தமது தேவைகளைத் தங்கள் தங்கள் கிராமங்களிலேயே தேடிக்கொண்டு, நல்வாழ்க்கை வாழவேண்டும் என்பதுதான். புரட்சி பூத்த ரஷ்யாவில்கூட, ஆரம்பகாலங்களில், கிராம வாழ்வைவிட பட்டண வாசமே மேல் என்று பலபேர் குடியேற முயன்றதாயும், அதற்கெனத்தடையே போடப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டதாகவும், அறிகிறோம். இதனை, அறியாதவரல்ல, நிதியமைச்சர். ஆயினும், கிராமங்களைவிட்டு, நகரத்துக்கு மக்கள் வருவது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் காட்டும் நல் அறிகுறிதான் என்று மொழிந்திருக்கிறார்!!

நாளைய தினமே, அமைச்சரின் உரைகேட்டு, ஆறணாவுக்கும் நாலணாவுக்கும் அழும் அடிமைமக்களும் விவசாயிகளும், நகரத்தை நோக்கி வந்துவிட்டால், ஆகா! பொருளாதர வளர்ச்சியைக் காணீர்! என்று பூரிப்பாரா, அமைச்சர்! புளகாங்கிதம் அடைய வழி அதுதான் என்றால், இப்போது முதலே, “புறப்படுங்கள்”, என்று சொல்லிப், பிரச்சாரம், செய்யலாமே!!

ஆளவந்த அமைச்சர், ‘எங்களுக்குக் கிராமம், நகரம் என்கிற வித்தியாசமில்லை. கிராமங்களையும் நகரங்களாக்கவே முயற்சி செய்கிறோம். கிராம மக்கள், ஏன், நகரத்துக்குவர வேண்டும்? அங்கே, அவர்களுக்கு, வேண்டிய வசதிகள் இல்லையாயின் நாங்கள் செய்து கொடுப்போம்! விவசாய காலம்போக, மீதி நாட்களில் உழைக்க, ஆலைகளை அமைத்துக் கொடுப்போம். அதற்கான மின்சாரவசதியைத் தேடித்தருவோம். எங்களாட்சியில் கிராமத்துக்கும் நகரத்துக்கும் வேற்றுமையில்லாமல் செய்வோம். நாட்டுமக்களில் பெரும்பாலானோர், கிராமவாசிகள் என்பது எங்களுக்குத் தெரியாதா? அத்தனை பேரும், ஆண்டுதோறும் கொஞ்சங் கொஞ்சமாக நகருக்குக் கிளம்பினால், நகரத்தில் தான் ஏதுவீடு? ஏது இடம்?” என்று பதில் சொல்லியிருப்பாரானால், விவேகமான விளக்கம், என்று பாராட்டலாம். அதைவிட்டு, கிராமமக்கள், நகரம் நோக்கிக் கிளம்புவதுதான் பொருளாதாரவளர்ச்சி என்கிறார்! இந்தப்புதிய சித்தாந்தத்தை கொங்குநாட்டுக்குமரர், எங்கே பெற்றாரோ, நாம் அறியோம்! நாளைய, தினம் இவர், நாட்டுப்புறமக்களிடையில் ஓட்டுக் கேட்கப் போகாமலிருக்கமாட்டார். „ஐயா, புண்யவானே! எங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுப்பேன் என்று சொல்லாமல், நகரம் நோக்கிவரச் சொன்ன, நல்லாத்மா அல்லவா நீர்? வாரும்! வாரும்! உமக்கு ஓட்டுப் போட்டதால் தானே, நகரத்தில் போயிருந்துகொண்டு, இதுதான் முன்னேற்றம் என்றீர். உம்மை, நகரத்துக்கு, அனுப்பியது, எம்பிசகு. உம்முடைய கிராமத்திலேயே, உம்மை இருக்கச் செய்வதுதான், நல்லது” என்கிற முடிவுக்கு மக்கள் வரவேண்டும். அப்போதுதான், அவருக்கு ஏற்பட்டிருக்கிறபோதை, தெளியும்! நாட்டின் நிலையும் புரியும்!!!

# வணங்குகிறேன்

என்னை ஆளாக்கிவிட்ட அறிஞர் பெருந்தகையின் நல்வாழ்த்தினையும், அறிவுப் பணிக்கு என்னைஇட்டுவந்து அண்ணனில்லாக் குறையைப் போக்கிவரும் கருணாநிதியின் உளமார்ந்த அன்புச் சொல்லையும் ஆரமாகக்கொண்டு, முகிழ்த்த ‘அறப்போர்’ முதல் இதழ் பற்றி, எனக்கு அன்புரையும் பாராட்டுக் கடிதங்களும் அனுப்பியுள்ளார்கள், என் தாயகத்துச்சகோதரர்கள். அவர்களுடைய பெருந்தன்மைக்கும், என் மாட்டுக் கொண்டிருக்கும் நல்லெண்ணத்துக்கும், என்றென்றும் நான் தலைவணங்கக் காத்திருக்கிறேன்! விருப்பங்களையும், ஆசைகளையும், சொரிந்து நல்யோசனைகளையும் எனக்கு எழுதியிருக்கிறார்கள், பலர். அவைகளை யெல்லாம், முடிந்தவரையில் நிறைவேற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

பயத்தோடு எடுத்தடி வைக்கும் இந்த என்முயற்சிக்கு நான் எதிர்பார்த்ததைவிட பன்மடங்கு உற்சாகமும் ஊக்கமும் விற்பனையாளர்த் தோழர்களிடமிருந்து கிடைத்த வண்ணமுள்ளன. அவர்களுடைய புது ஆர்வமும், உற்சாகமும். எனக்குப் பொன்போல.

என் நலமே தன் வாழ்வெனக் கருதிப்பாடுபடும் என் குடும்பத்திலொருவரான சுந்தரேசுவையும் எது சொன்னாலும் தட்டாது செய்யும் என் நண்பர் ஓவியர் ஜீவனையும், ஏட்டினை அழகுற அச்சியியற்றித்தரும் அன்புள்ள என்னருமை முல்லை.சத்தியையும் அவர்தம் தொழிலகத் தோழர்களையும், எனக்குத்துணைநிற்கும் தயாநிதி, கணேசன், சண்முகம், முதலியோரையும், நான், நினைக்காமலிருக்கமுடியாது.

அனைவரது ஒத்துழைப்பையும் கொண்டு, “அறப்போர்” வெல்லும் என்கிற நம்பிக்கையோடு, நடக்கத்துவங்குகின்றேன்! நல்மகிழ்ச்சியோடு, என்தாயகத்துத் தலைவருக்கு, வணக்கம் செலுத்திக்கொண்டு, ஒவ்வொரு கிழமையும், உங்களைச் சந்திக்கின்றேன்!!

தொண்டன்,
அரங்கண்ணல்



# சொன்ன சொல்லை மறந்திடலாமோ !

"காளை வயசு! கட்டான சைசு! களங்கமிலா மனசு!"

"என்னப்பா, வீரா! பாட்டு...?"

"பாட்டல்ல, ஆசிரியரே! பகட்டறியாப் பருவம்...பம்பரம் போன்ற உருவம்... ஒளிவீசும் கண்கள்... உணர்ச்சி வெறியேறிய உதடுகள்... சொல்லோ, மழை! ஆகா, என்னவென்று சுறுவேன், அந்த எழிற்காட்சியை, என்னவென்பேன்..."

',வீரா! உட்கார். யாரை இப்படியெல்லாம் வர்ணிக்கிருய்?



எதையெங்கு கண்டாய்? என்ன விசேடம்?"

"போயிருந்தேன், ஒற்றவாடை தியேட்டருக்கு!"

"நாடகம், காணவா!"

"ஆமாம்! கண்டேன், அங்கே, நாட்டின் அகத்தை..."

"உளருமல், கூறு. ஆவலை, அதிகமாக்காதே."

"இல்லை. இதோ, உன் கண்களால் பார்... யார் தெரியுமா, மேலே படத்திலிருப்பது இளஞ்சேரன்!"

"எந்த இளஞ்சேரன்?"

"அது, சரி! மாணவப் பருவம் தாண்டி, எத்தனை யாண்டுகளாகிறது, உனக்கு..."

"கிட்டத்தட்ட 17 ஆண்டுகளிருக்கும். இருந்தாலும், அந்த இன்பமான நாட்களை, களங்கமற்ற விநாடிகளை, கற்பனைகளிலே மிதந்த நேரத்தை, இப்போது நினைத்தாலும், இனிக்கிறது, வீரா!"

"அப்படிப்பட்ட இனிக்கும் மாணவப்பருவத்திலுள்ள தோழர் தான், இவர்! படிப்பது, மதுரைக் கல்லூரியில்!!"

"மதுரை, நல்ல ஊராயிற்றே. ஓடும் வைகையும், உயர்ந்த மலைக் குன்றின் தோற்றமும், வீதிகள் அழகும், வியாபாரச் சந்தடியும்... ஆமாம்! இந்த மாணவர், ஏன், எங்கும் போகாமல், "மைக்" அருகில் நிற்கிருர். வசந்த காலமாயிற்றே, மாணவப் பருவம். சுவைக்க வேண்டிய நேரத்தில், மேடையில் நின்று கொண்டிருக்கிருரே? எங்கே பேசினுர்! என்ன பேசினுர்!!"

"அவர் மட்டுமா? ஆசிரியரே! கடந்த 5,2,6-அன்று, ஒற்றவாடை தியேட்டரில் நடந்த சென்னை மாவட்ட திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாநாட்டுக்குப் போயிருந்தேன்".

"பேச்சாளனாகப்போயிருந்தாயா?"

"சேச்சே! பார்வையாளனாக. நான் மட்டுமா? இதோ, கீழே படத்தைப்பார். கருணாநிதி, என். வி. நடராசன். மதியழகன், மனோகரன், கோவிந்தசாமி, கண்ண தாசன் அரங்கண்ணல் முதலியோரும் என்னைப்போல் பார்வையாளனாகத்தான் வந்திருந்தனர்..."

"அப்படியா!"

"அது மட்டுமல்ல, மாநாட்டில் ஒவ்வொருவரும் பேசப் பேச, இவர்கள் மகிழ்ந்து கை தட்டிக் கொண்டுமிருந்தார்கள்!"

"என்னப்பா, இது! இவர்களே வியந்து பாராட்டு மளவுக்கு, அந்த மாநாட்டில், அப்படி யாரப்பா பேசினுர்கள்?"

"சட்டக் கல்லூரி மாணவர் இராமானுசம் தலைமை வகித்தார். மாநாட்டுச் செயலாளர் அன்புச் செழியன்—அடடா! நீ பார்த்திருந்தால் தெரியும்! பெயருக்கு ஏற்றபடி வந்தோரை உபசரித்துப் பேசினுர். வரவேற்புக் குழுத்தலைவர், யார் தெரியுமா? "நம்ம" என். வி. என். அவர்களின் மூத்த மகனுர், என். வி. என். சோமு!"

"புலிக்குப் பிறந்தது, பூனையாகுமா? சோமு, நன்ருக எழுதும் ஆற்றலையும் கொண்டுள்ள, தம்பியப்பா. எனக்குத் தெரியும். ரொம்பச் சாது. தந்தையைவிட, மிகவும், கூச்சசுபாவம் உள்ள பிள்ளை..."

"அதெல்லாம், நம்மிடம் பழகும் போது காட்டுகிற மரியாதை! அங்கே மாநாட்டில் ஒவ்வொருவரையும் சோமு அறிமுகப்படுத்தி வைத்தபோது, எனக்கே, வியப்பாயிருந்தது..."

ஆசிரியரின் பேட்டி

"சரி· சரி· மேலே, சொல்லு..."

"எப்படியப்பா சொல்வது? ஒரு பெண்! ஏழிசைவல்லி என்று பெயர்..."

"என்ன பெயர்? என்ன பெயர்?"

"பெயரிலே, மட்டுமல்லப்பா பேச்சிலே,தொனித்த தமிழ் இருக்கிறதே, இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. உருவைப் பார்த்தபோது இது, என்ன பேசப்போகிறது என்றுதான் நினைத்தேன். அப்பப்பா! கண்களில் தெறித்த வீரமும், சொல் வீச்சில் தொனித்த அழுத்தமும், நாமெல்லாம் பாராட்ட வேண்டிய தங்கையப்பா!!"

"பிறகு!"

"'கைவிலங்கு' எனும்தலைப்பில் தியாகராசன் என்ருெரு மாணவர் பி. எஸ். சி. படித்தவராம். எப்படிப் பேசினுர் தெரியுமா? "விடுதலையா?", எனும் தலைப்பில் சீனுவாசன் பீ. ஏ. என்ருெருவர், என்னென்ன ஆதாரங்களை அள்ளியள்ளி வீசினுர்! உண்மையில், நீவந்திருக்க வேண்டும்..."

"இவ்வளவு பேர் தான் பேசினுர்களா?"

"சரிதான், போ! ஒவ்வொருவரைப் பற்றியும் தனித்தனியே உன்னிடம் சொல்லி மகிழவேண்டும், என்றுதான் ஆசை. ஆனுல் எப்படி முடியும்? நானே, அப்போதுதானே, மேடையில் பார்த்தேன்! எந்த ஊர் தம்பி, நீங்கள் எந்தக்கல்லூரி, என்றெல்லாம் கேட்டு முழுவிபரமும் தெரிந்து கொள்ளத்தான் விரும்புகிறேன். இவர் இந்தக் கல்லூரி, இந்த வகுப்பில் படிக்கிருர், இப்படியிப்படி இவர் தேர்ந்தவர், என்று வாரா வாரம் விளக்கம் தரவேண்டுமெனும் ஆசையில்தான் உள்ளேன்......"

"நல்ல ஆசை! மிக மிக அவசியமும்கூட!! ஆனுல், உன் ஆசை நிறைவேறுமா? உன்னுல் எப்படி முடியுமா? யார் உனக்கு இந்த விபரங்களைத் தரப் போகிருர்கள்......"


"ஏன்? மாணவ கழகப் பொதுச் செயலாளர், நல் மனக் காளை, நட்புக்கோர் திலகம், 'எழிலகம்' எனும் பெயரால் இடம் அமைத்து சிதம்பரத்திலிருக்கும் சோமசுந்தரம் உதவமாட்டாரா?"

"அவர் எங்கே போவார், ஒவ்வொரு மாணவர் படத்துக்கும்! வரலாற்றுக்கும்......?"

"உண்மை தான். ஒவ்வொரு கல்லூரியிலிருக்கும் முற்போக்கு மாணவர்களும், ஏன் தங்களை, இன்னுர் இன்னுரென்று, நமக்கும் நாட்டுக்கும் சொல்லிக் கொள்ளக் கூடாது?"

"மாணவர்கள், என்ன, சுய புராணமா சொல்ல முன் வருவார்கள்?"

"தற்பெருமை என்பது வேறு! தானும், வளர்ந்து வரும் அறிவுப் படையின் தூதுவன் என்று சொல்லிக் கொள்வது வேறு!! உண்மையில், இந்த என்முயற்சிக்கு, மாணவர்களும், மாணவர் தம் கழகமும் ஒத்துழைத்தால், பெருமகிழ் வெய்து வேன். பேரின்பம் அடைவேன்......சரி சரி! மாநாட்டைப் பற்றிச் சொல்."



அதற்கு உன் ஏட்டின் மூலம், எனக்கு உதவவேண்டும் என்று தான் வந்தேன்..."

"நிச்சயம் செய்வேன், வீரா! எனக்கே, இந்தப் பதினேழு ஆண்டுகளில், வளர்ந்திருக்கும் மாணவர் படையோடு தொடர்பு கொண்டு, அளவளாவ வேண்டும் என்று ஆசையாகத்தானிருக்கிறது. அத்தனைபேரையும் சந்தித்து, உரையாடும் வாய்ப்பு, பிற்பாடு கிடைக்க வழி செய்து கொள்ளலாம் என்ருலும், ஒவ்வொருவர் படத்தையும் போட்டு,

"எல்லோரையும் அறிமுகம் செய்து கொள்ளப் போகிறேன் என்று சொல்லிவிட்ட பிறகு, உனக்குவிளக்கம் தேவையில்லை. சுருக்கமாகச் சொல்கிறேன். சீர்காழி சோமு, விருதை அமுதன், மணிவேந்தன், கே. ஏ. கிருட்டினசாமி,(மதியழகனின்இளவல்,இவர் இவரின் பேச்சிலுள்ள காரம் கடுமையானது!!), சேது பி. ஏ. ஜே. எஸ். இராசு, உதகை செயராமன், கா. வேழவேந்தன் (நல்ல

(பத்தாம் பக்கம் பார்க்க)

*2-ம் பக்கத் தொடர்ச்சி*

"ஹெக்டீ, என்ன நடந்து விட்டது?...ஏன் அழுகிருய் கணவனின் கேள்வி.

எல்லாவற்றையும் பிறகு கூறுகிறேன். முதலில். இந்த குழந்தைகளைக் கொண்டுபோய் காப்பாற்றுங்கள்

அந்த யுவதிகள் அவளுக்கு குழந்தைகளாகி விட்டனர். பயப்படாதீர்கள் குழந்தைகளே!! உங்களை நான்காப்பாற்றுகிறேன் அவள் கூறினள்.

"காப்பாற்றிவிடலாம் ஹெக்டீ, அது ஒரு பெரிய விஷயமல்ல ஆனல் அதற்குப் பிறகு நம்முடைய நிலை. அதைச்சிந்தித்தாயா?" கணவர் கூறினர்.

ஹெக்டிக்கு கோபம் வந்துவிட்டது. அவளுடைய கண்களில் நெருப்புப் பற்றியெரிந்தது "நம்முடைய கதி எப்படி வேண்டுமானுலும் ஆகட்டும். அதை நீங்கள் ஆராயவேண்டியதில்லை. மொபுட்டுவை நினைத்தால் உங்களுக்கு குலைநடுக்கம் ஏற்படுகிறது... இல்லையா?...ஆனல் மொபுட்டு யாரென்பது ஹெக்டிகுத்தெரியும். ஹெக்டி யாரென்பது மொபுட்டுவிற்குத் தெரியாது. அதைப் பார்க்கத்தான் போகிருன். சரி!!- ஏன் தயங்குகிறீர்கள்...உடனே இவர்களை கொண்டு போய்காப்பாற்றுங்கள்!!" அவளுடைய வார்த்தைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வெடி குண்டாகத் தென்பட்டன.

ஹெக்டீஞ மீண்டும் தன்னுடைய சேய்படுத்திருந்த தொட்டிலை அணுகி தாலாட்டு பாடத் தொடங்கினள். தொட்டிலை ஆட்டிக்கொண்டிருக்கும்போது அடிக்கடி அவளுடைய கண்கள் அந்த குழந்தையின் மீது பதிந்து, குபுகுபுவென்று நீரைக் கொட்டின,

"என் அருமை மகளே உனக்கும், உலகத்துக்கும் எந்தவிதமான உறவும் இல்லையென்பதைப் போல், மயங்கிக் கிடக்கிருயே! இவர்களைப்போல் பருவமெய்தினல், நீயும் இப்படித்தானே வதைபடப்போகிருய்!" என்று நினைத்ததும் அவள் ஓவென்று அலறிவிட்டாள். ஆனல் மறுகணம் சமாளித்துக்கொண்டுத் தாலாட்டை தொடர்ந்தாள்.

"எல்லாம் முடித்துவிட்டேன். அவர்கள் காப்பாற்றப்பட்டுவிட்டார்கள். புகலிடத்தில் அந்த யுவதிகள் பத்திரமாக இருக்கிருர்கள். இனி அடுத்த படலத்திற்கு—மொபுட்டுவின் வருகைக்குப் பிறகு நடக்கும், அந்த காட்சிகளுக்கு உன்னை தயார் செய்துகொள்!" கணவன் ஹெக்டீஞவிடம் கூறினள்.

"என் உயிருக்குயிரானவரே! ஒன்றும் நடக்கப்போவதில்லை. தைரியமாக இருங்கள். அஞ்சாமை ஒன்றுதான் இப்பொழுது நம் ஆயுதம்" என்று கூறிவிட்டு அவள் கணவரை கட்டியணைத்து ஆசைதீர முத்தமிட்டாள்.

நிமிடங்கள் இரண்டுமூன்று ஓடியிருக்கும். பின்னல் இருபது வீரர்கள் புடைசூழ காங்சோவின் தலைமைத்தளபதிக்குரிய எல்லா வித ஆடம்பரத்துடனும், அந்தஸ்துடனும், இளைஞன மொபுட்டு பிரவேசித்தான்...அவனுடைய கண்களில் காமப் புயல் வீசியது.

"ஹெக்டீ இன்று உன் இல்லத்தில் எனக்கு அருமையான ஒரு விருந்து கிடைக்கப்போகிறது இல்லையா?...சரி, இருக்கட்டும். எங்கே அந்தமலர்களை அழைத்து வா. இதுவரை எந்த வண்டும் அந்த மலர்களைச்சுற்றி வட்டமிடவில்லை...புத்தம் புது மலர்கள்!" என்ருன் மொபுடு.

"யாரைக் கூப்பிடச்சொல்கிறீர் பிரபு?"

ஹெக்டி ஒன்றும் தெரியாதவளைப்போல் கேட்டாள்.

"காப்டன் இங்கு கொண்டு வந்தாரே, அந்த இளமொட்டுகளிரண்டை—லுமும்பாவின் சகோதரி பெற்றெடுத்த மாணிக்கங்களை, அவைகளைத்தான் கேட்கிறேன்...கூப்பிடுங்கள் அவர்களை..."

"பிரபு நான் பிச்சை கேட்கிறேன். அந்த இரண்டு குழந்தைகளையும் எனக்கு பிச்சையாகத் தாருங்கள் பிரபு" ஹெக்டீஞ கெஞ்சினள்.

"ஓ...தாராளமாகத் தருகிறேன்...இன்றிரவு மட்டும் எனக்கிருக்கட்டும். நாளையிலிருந்து அவர்கள் உனக்குச் சொந்தம்" மொபுடு கூறினன்.

"இல்லை. பிரபு. இன்றிரவுமட்டுமல்ல, அதற்கு முன்னரே நான் அவர்களை எனக்குச் சொந்தமாக்கிக்கொண்டேன்." ஹெக்டீஞ கூறினள்.

"ஹெக்டீ! நீஎன்ன கூறுகிருய்?......இதுவிளையாட்டிற்கான நேரமல்ல. விஷயத்திற்கு வா"

"காங்கோவின் இரும்பு மனிதனை உங்களிடம் ஏழை, ஹெக்டிக்கு என்ன விளையாட்டிருக்கிறது?...மெய்தான் பிரபு மெய்தான்! அவர்களை இனி நீர் பார்க்கவே முடியாது." அவள் திடமாகக் கூறினள்.

"ஹெக்டீ, ஜாக்கிரதையாகப் பேசு!...மொபுடு எந்த அளவிற்கு அழகின் அடிமையோ அந்த அளவிற்கு கொடியவனும்கூட—"

"நான் சாக்கிரதையாகப் பேச வேண்டிய அவசியமே கிடையாது. கர்னல் மொபுடுவின் குணதிசயங்களும், செய்கைகளும், இந்த ஏழைக்கு நன்கு தெரிந்து தானிருக்கின்றன...உங்களுக்கும் என்னை ஓரளவு தெரியுமென்று நினைக்கிறேன்."

"அவர்களை இங்கே கொண்டு வரமாட்டாய்! அப்படித்தானே?" மொபுடு கேட்டான்.

"இங்குமட்டுமல்ல, இனிஎங்கும் அவர்கள் உங்கள் கண்ணில் தென்படப்போவதில்லை....மறைப்பானேன். அவர்கள் இங்கு கிடையாது. அவர்களை நான் தக்க புகலிடத்தில் சேர்ப்பித்துவிட்டேன். என்னல் அவர்கள் காப்பாற்றப்பட்டுவிட்டார்கள்."

"ஹெக்டீ!" மொபுடு அலறினன்.

"கர்னல்!" அவளும் சளைக்கவில்லை.

"இந்த கட்டிடம் முழுவதும் சோதனையிடுங்கள்."

மொபுடு படையினருக்கு கட்டளையிட்டான். அரைமணி நேர சோதனைக்குப் பிறகு கையை விரித்தவாறு காப்டன் ஏமாற்றத்துடன் திரும்பினன்.

"கர்னல்! அவர்கள் இந்த வீட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிருர்கள்." என்ருன் கேப்டன் பண்டாடே.

"காப்டன் இனி தாமதிக்க வேண்டாம்." என்று கூறிவிட்டு மொபுடு தொட்டிலை சுட்டிக்காட்டினன். உடனே காப்டன் இடுப்பிலிருந்து ஒரு கொடுவாளை உருவியெடுத்து தொட்டிலை நெருங்கினன் "அய்யோ! வேண்டாம்... வேண்டாம் இதோ நான் கூறிவிடுகிறேன்" என்று ஹெக்டியின் கணவர் எதையோ சொல்ல வாயெடுத்தார். அவ்வளவுதான் அடுத்த கணம், ஹெக்டீஞ "வேண்டாம். வேண்டாம். நாம் சாவோம். குழந்தைகள் கற்புமிஞ்சட்டும்! என்று கூவியவளாய் தன் கணவனை நோக்கிப் பாய்வதற்கும் கொடியவர்களின் குண்டுகளால் அவன் சாய்வதற்கும் நேரம் சரியாக இருந்தது.

"காப்டன்! உம் சீக்கிரம்."

மொபுடுவின் கர்ச்சனை.

காப்டன் மின்னலொளிசிதறும் அந்தக் கட்டாரியை ஹெக்டியின் மழலைச்செல்வத்தின் மீதுவைத்து ஒரு அழுத்து அழுத்தினன். பிறகு அதை, லாவகமாக, ஒருகம்பியால் அல்வாத்துண்டை குத்தியெடுப்பதைப்போல், தூக்கி எடுத்தான். சாவும் தருவாயில் குழந்தைகளுக்கு ஒரு சிறு அலறலிருக்கிறது ஹெக்டியின்குழந்தையும்அப்படித்தான் அழுதது. கணநேரம் அதன் கைகள் தாயை நோக்கி நீண்டன. பிறகு அந்த பொற்தளிர் கட்டாரியில் ஒட்டித்தொங்பியது. ஒரு அரைஞாண் கனத்திலிருக்கும், சிவப்புப்பாம்பு ஊர்ந்துவருவதைப்போல் கட்டாரியிலிருந்து குருதி வடிந்தது. இதையெல்லாம் கண்ணுற்றும் ஹெக்டீஞ ஒன்றும் புரியாதவளைப் போல் பிரமையுடன் நின்று கொண்டிருந்தாள்.

"கட்டாரியில் உறைந்து கிடக்கும் குழந்தையை அப்படியே கட்டாரியுடன் அவளிடம் கொடுங்கள்" சிப்பாய்கள் அவ்விதமே செய்தனர்.

"அடுத்ததாக இவளை இப்படியே ஊர்வலமாக கொண்டு செல்லுங்கள்...இன்றிரவு முழுதும் இவளை உங்கள் மனைவியாகப் பயன்படுத்துங்கள் நாளைக் காலை இவளை ஒப்படைக்கும்போது கொஞ்சம் உயிர் இருக்கவேண்டும்." மொபுடு கட்டளையிட்டான்.

மறுநாள் காலை குற்றுயிராக்கப்பட்ட ஹெக்டீஞவின் உயிரை முழுக்கப்பறிக்கும் திருப்பணி மொபுடுவின் முன்னிலையில் ஆரம்பமாகியது. ஒரு ஆப்பிரிக்க மதயானையின்முன் அவள் தூக்கியெறியப்பட்டாள். அடுத்தகணம் கழுத்துவரை இரண்டாகப்பிளந்த நிலையில் அவளுடைய நிர்வாண மேனி இரண்டு மூங்கில் கம்பங்களில் தலைகீழாக தொங்கவிடப்பட்டது. ஆம்! காங்கோவில் எல்லாமே தலைகீழாகத்தான் ஆகிவிட்டன. மொபுடுவின் கூரப்படைகள் அதைச்சுற்றிவெற்றிக் கூத்தாடினர்கள் ... அந்த வெறிக்கூத்துதான் அவர்களுக்கு வெற்றிக்கூத்து.

* * *

அதோ ஒரு குரல் கேட்கிறது! அதுஎன்ன குரல்?

"சாவை இனிமையாக ஏற்றுக்கொண்ட, ஹெக்டீஞவின் சடலத்திலிருந்து சொட்டுகின்ற ஒவ்வொரு சொட்டு இரத்தமும் ஒவ்வொரு எரிமலை. உலகெங்கிலுமுள்ள மொபுட்டுகளே, அவை உங்களை நிர்மூலமாக்கும் நாள் வெகு தொலைவிலில்லை. எச்சரிக்கிறேன், எச்சரிக்கிறேன் எந்த சக்தியாலும் உங்களைப் பாதுகாக்கமுடியாது."

மொபுடு திரும்பிப்பார்த்தான்.

"யாரது?"

"நான்தான். என் பெயர் மனிதன்"

யாரோ குரல் கொடுத்தார்கள்.

## அன்பழைப்பு

அன்புடையீர்,

நிகழும் 19-3-61ம் நாள் ஞாயிறு காலை 10 மணியளவில் எனது புதல்வனுக்கு அறிஞர் அண்ண அவர்கள் பெயர் சூட்ட இருக்கிருர்கள். 41, கிருஷ்ண ராயர் தெப்பக்குளத்தெரு நெல்லை கல்யாண மகாலில் நடைபெறும் இவ்விழாவிற்கு அழைப்பிதழ் கிடைக்கப்பெருத அன்பர்கள் இதுவே அழைப்பாக ஏற்று விழாவிற்கு வருகை தந்து சிறப்புவிக்க வேண்டுகிறேன்.

அன்பன்,
முத்து எம். சி.
செயலாளர்
மதுரை மாவட்டம்.

### 'கோகுல்' தந்தையார் மரணம்


நமதருமை நண்பரும், சிறந்த வழக்கறிஞரும், கழக ஆர்வமிக்க பண்பாளருமான தோழர் பி. ஆர். கோகுல கிருட்டிணன் அவர்களின் தந்தையார் திரு. இராமையா அவர்கள் சென்னையிலுள்ள தமது இல்லத்தில் 76-வது வயதில் கடந்த மார்ச் 8-ந் தேதி, இயற்கை யெய்திய சேதி கேட்டு மிக மிக வருந்துகிரேம். டாக்டர் பால கிருட்டிணன், என்சினீயர் இராதா சிருட்டிணன் முதலிய மகன்களையும், ஒரு மகளையும், நமது நண்பர் கோகுலையும், குடும்பத்தாரையும், பெருங் கலக்கத்தில் விட்டுச் சென்ற, அப்பெரியவர், தன் செல்வங்களின் சிறப்பைக் கண்டு, இன்னும் மனமகிழ்ச்சி அடைய வேண்டிய வயதில், காலமானது, எம்போன்ருேருக்கு மிகவும் வேதனையைத் தருகிறது. வருந்தும், அந்த நல்ல குடும்பத்துக்கு, நமது மனமார்ந்த அனுதாபங்களையும்,மன வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிரேம்.




கப்பற்படையும், தரைப்படையும் சென்றன! மாற்ருருடன் போர் தொடுக்கவா? அல்ல, அல்ல. சொந்த மண்ணிலே உழைத்து, அம்மண்ணிலேயே சாவோம் எனச் சங்க நாதம் செய்திடும் அண்ணன் தம்பிகளை ஒடுக்க. படை! தடை! எதானுலும் பயந்துவிட, முடை நாற்றம் வீசும் முட்டைக் கூட்டமல்ல, நாங்கள். மூச்சடக்கி, முத்து எடுத்த இனம்! முழுமதியென, உலகெலாம் ஒளி வீசி நின்ற பரம்பரை! எங்களை அழிக்க ஆயுதங்களால், முடியாது. அன்பால் வென்ருருண்டே ஒழிய, அதட்டலால் எம்மை மிரட்டியோர் அவனியிலே கிடையாது என முழக்கமிட்டனர். படைவீரர்கள், பாய்ந்தனர்! எதிர்நோக்கி வந்து, இதோ மார்பு, என்று காட்டினர்! கீழே தள்ளி உருட்டி, "கேடுகெட்டவர்களே! துப்பாக்கி முனையிலே யிருக்கும் கத்தி, கிழிக்கும் உமது குடலை!!" என்றனர். இருதயத்தையே எடுக்கத் துணிந்துவிட்ட இந்த அரசில் குடல்போனுல் என்ன, உடல் போனுல் என்ன, எதற்கும் துணிந்தே விட்டோம், எனக் கூவினர் மக்கள். படைவீரர்கள், "இதென்னடா, தொல்லை!" என்று நிமிர்ந்தனர். காலிகளும் கூலிகளுமா யிருந்தால், அவர்களை எளிதில், அடக்கிட முடியும், இவர்களோ, நல்லதொரு காரியத்துக்காக, மக்கள் மனை போனுல் என்ன என்று பாடிக்கொண்டு வநதுவிட்ட, அறப்போர் வீரர்கள். அடி! உதை!- என்று, அகிம்சை பிறழ்ந்த முறையில், ஏதாவது காரியங்களில் ஈடுபட்டாலும், அதைக் காரணமாகக் கொண்டு, சுட்டுத்தள்ளலாம். துப்பாக்கியைக் காணும்போது கூட, சுடுசொல், கூருமல் அன்புரையே தருகிருர்கள்! என்ன செய்வது?- என்று, யோசித்தது, அரசு.

யோசனையின் விளைவாக, முரட்டு மூளையில், உதித்தது ஒரு குருட்டு எண்ணம. நம்மை நம்பி வாழும் இந்த மக்களுக்கு அரிசி, கிடைக்காமற் செய்து விட்டால்? சோறின்றி, எத்தனை நாட்களுக்கு, இவர்கள் இருக்க முடியும்! வயிறு வாடினுல், எதுவும். வழிக்கு வந்து விடுமன்றே? இதனுல்தானே, அந்தக் காலத்தில், எதிரிகளை ஒடுக்க அவர்களுக்குக் கிடைக்கும் உணவுப் பொருள்களைத் தடுத்துவிடுவது, ஒரு போர் முறையாகக் கருதப்பட்டது. ஆட்சி நம்முடைய கையில்! அரிசி, கிடைக்காமற் செய்துவிட்டால், என்ன செய்ய முடியும்? பிறகு, அறப்போராவது, அட்டகாசப் போராவது. எல்லாம் அடங்கிவிட வேண்டியதுதானே!! சொந்த மண்ணில் வாழும் மக்கள் மீது, இந்தப் பாணத்தைப் பாய்ச்சினர். மிகமிகக் கொடுமையான, பாணம்! கொடுங்கோலர் தம் மனதில் மட்டுமே, உருவாக வேண்டிய பாணம்!! எத்தனை நாளைக்குப் பட்டினி கிடக்க முடியும்—தானிருக்கலாம், தன் மனையாட்டியை இருக்கச் செய்யலாம், தாயிடம் கை கூப்பிக் கேட்டுப் பசியை அடக்கிக் கொள்ளச் சொல்லலாம், தான் பெற்ற மழலைச் செல்வங்கள் பசியால் துடிப்பதைப் பாதகன் கூட சகிக்கமாட்டானே? என்ன செய்வது, இத்தடையை எப்படி நொறுக்குவது, என்று அறப்போர் வீரர்களல்ல, நாட்டுமக்கள் எண்ணினுர்கள்!

அரசு, அரிசி அனுப்பாவிடில் போகிறது—கழனிகளிலே நாங்கள் அறுத்தெடுத்த நெல் மணிக்கதிரை விற்ருல் எமக்குப் பணம்தான் கிடைக்கும்-மானத்துக்குப்போரிடும் உம்மை விடப் பணமோ, எமக்குப் பெரிது?- அஞ்சி, அயராதீர்கள்-அரிசியை, நாங்கள் கொண்டு வந்து தருகிறேம்-இரயிலில், லாரியில் ஏற்றினுல்தானே, அரசு தடுக்கும்-எங்கள், தலையில், முதுகில், சுமந்து வந்து தருகிறேம்-என்று, முன் வந்தனர்!! அறப்போர் நடத்தும் மக்களைப் பழிவாங்க எண்ணிடும் அரசின் போக்கு கண்டு நாட்டுப்புற மக்கள் பதறியது கேட்டு. வணிகக் குடிமக்கள், கூடினர். அவர்கள் உள்ள மெல்லாம், மெழுகாகியது. இத்தனை நாளும், நாம் வாளாயிருந்தோமே? இதோ எமது உதவி! எங்கெங்கு அரிசி கிடைக்குமோ அதையெல்லாம் வாங்கி, நியாயவிலைக்கு, நாங்கள் தருகிறேம் - அதோடு, உமது அறப்போருக்கு உதவியாக நிதியும் அளிக்கிறேம்-எமது நெஞ்சம் உமக்கே என முன்வந்தனர்! கொட்டுகிறது மழை தலையில்—கொட்டுகிறது, பசி வயிற்றில்-கொட்டுகிறது அரசின் போக்கு நெஞ்சில்—எனினும், ஆடாது, அசையாது, இருந்த இடத்திலிருந்தபடியே இலங்கை வாழ்த் தமிழர்கள், சர்க்காரது அலுவலகங்களில் செய்துவரும், மறியல் நடந்து வருகிறது. யாழிலிருந்து இன்னிசையே கேட்கும்! மோகன ராகத்தை இசைப்பதுபோல, அமைதியோடு வாழ்ந்த யாழ்ப்பாண நகரமும், ஏனைய தமிழ்ப் பட்டணங்களும், இன்று முரசொலிக்கின்றன!! இம்முறை, அங்கே நடைபெற்று வரும் அறப்போர், எளிதாக எண்ணக்கூடிய ஒன்றல்ல. ஏதாவது ஒரு அரசியல் கட்சியின் சார்பில் நடத்தப்படுவதும் அல்ல. இலங்கையின் வட பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும், தமிழர்கள், அதிகம். அந்தப்பகுதிகள் யாவும், இன்று அறப்போர்க்களமாகி விட்டன! "யாரோ நடத்துகிருர்கள் எமக்கென்ன?" என்று போவோரில்லை நடக்கும் அறப்போருக்கு நம்முடைய பங்கென்ன, என்று கேட்கிருர்கள் ஒவ்வொருவரும் இலங்கை வாழ்த் தமிழர்களில், முசுலீம் மக்கள், குறிப்பிடக்கூடிய தொகையினராகும் அந்த மரக்கலராயரும், இப்போது, மார்தட்டி இறங்கியிருக்கின்றனர். அடுப்பங்கரைகளை விட்டு, அணங்குகள் புறப்பட்டு, அறப்போரி லீடுபட்டிருக்கின்றனர்!! எங்கும் பரபரப்பு-கூட்டம்-இதைப்பற்றியேப் பேச்சு- ஒரு தேசீயஎழுச்சி, அங்கே உருவாகியிருக்கிறது. கடந்த 18-ந்தேதியன்று, வேதியர் குலத்தவர்கள், தத்தமது பெண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு, வேதங்களை முழக்கிய வண்ணம் ஊர்வலமாக வந்தனராம். வழியெல்லாம், திரு வெம்பாவையையும், திருவாசகத்தையும் பாடிக்கொண்டு, சேர்ந்துவந்த காட்சி தமிழகத்து 'வேதியர்' அறிய வேண்டிய மாட்சி என்று செப்புகிறது, சேதி. அறப்போர் நடக்கும் அரசாங்க அலுவலகங்கள் புனிதயாத்திரை போகும் திருத்தல்ங்களாகக் கருதப்பட்டு வருகிறதாம். தேவாலயங்களில், அறப்போர் வெற்றிக்கென, காலை மணி ஐந்துக்கும் இரவு மணி 9 க்கும், கண்டாமணி அடித்து,



தி. மு. க. தலைமை நிலையம் சென்னையில் நடத்திய மாபெரும் கண்டனக் கூட்டத்தில், அறிஞர் பெருமான்.

(புகைப்படம்; சாமுவேல்)



## உள்ளத்தையுருக்கும் உற்சாகம்
## ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
## மனித நீதி மலரட்டும்....
## நாதியற்றதா, நாடாண்ட இனம்?

எழுச்சியும்ஊக்கமும்உற்சாகமும் தரப்படுகிறதாம்!! இப்படிப்பட்ட ஒரு ஊக்கம், ஒரு உற்சாகம், ஒற்றுமை இதுவரையில் ஏற்பட்டதில்லை யென்று சொல்லுகிறார்கள்.

இவ்வளவு ஆர்வமும் ஆவேசமும் இலங்கை வாழ்த் தமிழருக்கு ஏற்படுவானேன்?—எனக் கேட்போர், இருக்கக் கூடும்.

குடியிருக்கப்போன இடம் தானே ? அங்கே போய் அந்த அரசைப் பணிய வைப்பது நியாயமா ? -என்று, சொல்வோரும் இருக்கக்கூடும்.

இலங்கை!-வாழப் போய்த் தங்கிய வம்பு மடமல்ல, தமிழருக்கு. ஆண்டாண்டு காலமாய், அண்ணனும் தம்பியும் போல ஓடி விளையாண்ட கூடம். முடியுடை மூவேந்தர்கள் இறவாப் புகழோச்சி இருந்த காலத்திலே, இலங்கையும் தமிழ் நாடும் ஒரே தட்டிலுண்ணும் இரண்டு புருக்களைப் போல் இருந்திருக்கின்றன. சோழ மன்னன் ராசராசன், இலங்கையின் வடபுலத்தைவென்று, அந்த இடத்துக்கு மும்முடிச் சோழமண்டலம் எனும் பெயரைச் சூட்டினான்! இலங்கையிலிருந்துகொணர்ந்த ஆட்களைக் கொண்டு, காவிரிக்குக் கரையமைத்தான் கரிகாற் பெருவளத்தான் என்பர்! உட்பூசல்கள் உருவான நேரத்தில், இலங்கையரசர்கள், இடம் தேடி வந்தது இங்குதான். மூவந்தர்களுக்குள்ளும் போர் மூண்டால், மூவரில் ஒருவரை ஆதரிக்க, சிங்கள அரசர்கள் படையுடன் வந்திருக்கின்றனர். பாண்டிய நாட்டுப் பைங்கிளிகள், இலங்கைச் சோலைக்குச் சென்றிருக்கின்றன! சோழனின் மணிமாடத்துக்குச் சிங்களத்துச் செவ்வந்திப் பூக்களும் வந்திருக்கின்றன! இலங்கையின் இரத்தினங்களை எடுத்து சேர நாட்டுத் தேனிதழ் மாதர் சிரிப்பு தவழும் தத்தமது உதடுகளின் நிறத்துக்கு ஒப்பிட்டு மகிழ்ந்த காலமும் உண்டு! இலங்கையின் ஆதிக்குடிகள், திராவிடரே—பஃறுளியாறு கடல் கொள்ளப்பட்டபோது, இரத்தினத் தீவான இலங்கை பிரிபட்டது என்பர், சரித வல்லுநர் ஈழம் எனும் சொல்லே, 'கேரளர்' என்னும் சொல்லிலிருந்து மருவியதாகவும் ஒரு ஆராய்ச்சி இருக்கிறது. மலையாளத்தின் தென்னஞ் சோலைகளையும், இலங்கையிலும் அதே மண்வளம் இருப்பதையும் காட்டி, இரண்டுக்கும் ஒப்புவமை கூறுவோரும் உண்டு. கதிர் காமத்துக் கந்தனையும், திரிகோணமலை போன்ற இடங்களிலுள்ள திருக்கோயில்களையும், தமிழறிந்தான் இராவணனையும் சான்றுக்கிழுத்து, பழந் தமிழர் வாழ்ந்த இடம் என்போரும், இருக்கிறார்கள். இப்போதும், நெல்லை மாவட்டத்தில் ஈழத்துப் பிள்ளைமார் என்போர் இருக்கிறார்கள். இவ்வளவுசான்றுகள் ஏன்?

யாழ்ப்பாணம்!—எனும் சொல்லே, போதும், தமிழர்கள், எவ்வளவு தொன்மை கொண்டவர்களாக இலங்கையில் வாழ்கிறார்கள் என்பதைக் கூற! இங்கே நம் பேச்சு வழக்கிலிருக்கிற தமிழை விட, அங்குள்ளோர் பேசிடும் தமிழில், தூய்மையும் தொன்மையும் இருக்கிறது!!

வாழவழியில்லாமல், 'கள்ளத் தோணி' ஏறி, இலங்கை நோக்கித் தமிழன் செல்கிறான் என்பதாலேயே, தமிழர் குடியேறிய இடம் எனக் கூறிடமுடியாது. தமிழ்நாடும் இலங்கையும், அண்டை வீடுகளானதால், இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் போக்குவரத்தும் இருந்து வந்திருக்கின்றன. வளமான பூமியிருந்தும் வாழ வழியில்லாத் தமிழன், அங்கே உழைத்தாவது போய்ப்பிழைக்கலாம் என்று போவதும், வருவதும் இருந்தே வந்திருக்கிறது! இப்படிப்போனோரில் பலர், இரண்டு தலைமுறை, மூன்றுதலைமுறை என்று இலங்கையின் வாழ்வோடு, இரண்டறக் கலந்துவிட்டார்கள். எனவே, தமிழர்கள் குடியேறிய இடமல்ல, இலங்கை, ஆதியிலிருந்து, தமிழனும் சிங்களவரும், சகோதரர்களாகச் சேர்ந்துவாழ்ந்த இடம்! இனியும், சேர்ந்து வாழவேண்டிய ஓரிடம்! ! இலங்கை, தமிழருக்கு, இலண்டனல்ல. சிங்களருக்கு, தமிழ் நாடும் அமெரிக்காவல்ல.

இலங்கையின் மொத்த மக்கள் தொகை 90 லட்சம்! இதில்; தமிழர்கள் தொகை 30 லட்சம்!! மொத்த மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர், தமிழர்கள். மக்கள் தொகையில் மட்டுமல்ல, இலங்கையின் வாழ்வில், இரண்டறக் கலந்துவிட்டவர்கள் தமிழர்கள். உழைப்பால், இலங்கையை உருவாக்கி வருகிறார்கள்—அறிவால், அந்நாட்டின் பெருமையை அதிகமாக்கி வருகிறார்கள்; தோட்டத் தொழிலாளிகளாக மட்டுமல்ல, டாக்டர்களாகவும், தமிழர்கள் இருக்கிறார்கள். "நமது தாயகம், இலங்கை. அதன்புகழே நம் பெருமை," என்று இரண்டறக் கலந்துவாழும், தமிழ் மக்களின் முக்கியத்தை, ஆண்ட வெள்ளையன் உணர்ந்தான்! அதனால், அவன் காலத்தில், தமிழர்களுக்கும் அரசியலிலும் அதிகாரங்களிலும் ஓரளவுக்கு இடங்கள் கிடைத்தன!! இன்னும் சொல்ல வேண்டுமானால், அவன் காலத்தில், சிங்களத் தோழர்களும் தமிழ்க்குடிகளும், ஒற்றுமையாகவே வாழ்ந்தனர். அதுமட்டுமின்றி, வெள்ளை ஆதிக்கத்தை இலங்கையைவிட்டு அகற்றவும், தோள்கொடுத்துப் போராடினார்கள் தமிழர்கள். சிங்களத்தின் அரசியல்வாதிகளுக்கு அப்போது ஆண்ட வெள்ளையனை வெளியேற்றும் வேலை இருந்தது! அந்த வேலை முடிந்து, ஆட்சி தங்கள் கைக்கு வந்ததும், கிடைத்த சுதந்திரத்தைச் சுகவழியாக்கும் மார்க்கத்தில் ஆளவந்தவர்கள் செல்லவில்லை!! சிங்கள மக்கள் மனச்சோர்வு அடைந்து, தங்கள்




டியிலேட்டி (இலங்கை) என்ற இடத்தில் மாவீரர்கள் நடத்திய 'அறப்போர்' அணிவகுப்பு

செயல் திறமையைச் சந்தேகிக்கக்கூடாதே என்பதற்காக "ஒரே மொழி" எனும் வெறித்தனத்தை உண்டாக்கி, "ஆகா! இவரைப் போல் நம்மொழிக்குப் பாடுபடும் உத்தமருண்டோ? சிங்களத்தைக் காக்க எழுந்த சிங்கங்களே வாழி!" என்று பாராட்டவேண்டும் என்பதற்காகப் பாதகமான வழிகளில், சிங்கள அரசியல் வேட்டைக்காரர்கள் ஈடுபட்டுவருகின்றனர். வீட்டைக்கொளுத்திவிட்டு, எரியும் நெருப்பில், சுருட்டுப்பிடிப்பவன், வாழ்க்கைச் சூதாடிமட்டுமல்ல, ஏமாளியுங்கூட! தீபரவுகிறது என்று தெரிந்தால், அதை அணைத்துவிட்டு, அன்பால் எதனையும் வெல்கிறவனே, புத்தரின் பொன்னுன சீடனுவான்—சிறப்பும் அடைவான்!!

பற்று என்பது வேறு, வெறி என்பது வேறு. மொழிப்பற்று, எல்லோருக்கும் இருக்க வேண்டியதுதான். ஆனுல், பற்றினையே வெறியாக்கி, எமது மொழியை நீ பயிலவேண்டும் எனவற்புறுத்துவது; மனித நெறிக்கு மாறுபட்டதாகும். நெறிமாறிய வழியிலே, சிங்கள அரசு, செல்கிறது. ஒருவரல்ல, இருவரல்ல, நாட்டின் மக்கள் தொகையில் மூன்றிலொரு பகுதியினராயிருக்கும்—தமிழர் மீது சிங்களத்தைத் திணிக்கிறது!! இதன் சின்னமாக 1958 ல் தமிழர்பட்ட அவதியினை நாம் மறந்திருக்க முடியாது. "சிங்கள மொழி வேண்டும்," எனும் போர்வையில், தமிழர்தம் கடைகள் சூரையாடப்பட்டதும், தமிதர்களை நிறுத்தி அவர்தம் முதுகிலும் மார்பிலும் சிங்கள எழுத்துக்களைப் பொறித்ததும், தமிழ்ப்பெண்களெல்லாம் அவமானப்படுத்தப்பட்டதும், எல்லாவற்றிற்கும் மேலாக 158 தமிழ் உயிர்கள் சாகடிக்கப்பட்டதும், உலகம் அறியும்!! முதலில், உரிமைகளை மறுத்தார்கள், மணிஆர்டர் அனுப்பாதே என்று—பிறகு, குடியுரிமை கிடையாது என்ருர்கள்—இப்போது, உன்னை எப்படியாவது தொலைப்படுத்தித் துரத்துகிறேன்பார் என்று மொழிவெறிக் கொள்கையைப் புகுத்துகிருர்கள், இலங்கை அரசினர். இந்த அக்கிரமத்தை எதிர்த்தே, கடந்த 26 நாட்களாக, அறப்போர் துவங்கி நடத்தி வருகின்றனர், இலங்கை வாழ் தமிழர்கள். இலங்கையரசையோ, சிங்கள மக்களையோ, எதிர்த்துத் துவக்கியதல்ல, அறப்போர். தங்களைத் தாக்கவரும் கொடுமையைத் தடுத்துநடத்துவதாகும். இலங்கை வாழ்தமிழர்கள், எவ்வளவு சகோதர எண்ணத்துடன், சிங்களரை மதிக்கிருர்கள் என்பதை, "சுதந்திரன்" ஏடு வெளியிட்டிருக்கும், இக்கவிதை, சொல்லும்.

ஒருதாய் அவள் உதரத்திடை
உறுவார் இருபுதல்வர்!
தருவான் நமதுரிமைப் பொருள்
தமையன் எனநெடுநாள்
சொரிவாய்விழி; இனிமேல்வழி
உளதேல், ஒருவழிதான்!
பொருவாய்!அட,பொறுமைக்கிவர்
பொருளே தரவிலையால்!

உதரத்திடை உறுவார், இருபுதல்வரில், தருவார் உரிமை தமையன் எனக் காத்திருந்து, துவக்கியுள்ள போர் இது எனச் சொல்வதில் தென்படும் அன்பையும் நல்லெண்ணத்தையும், மதிக்கமறுக்கிறது இலங்கை அரசு!

பாலஸ்தீனத்திலிருந்த யூதர்களை, இப்படித்தான் அரபு மக்கள், அஞ்சுமளவுக்கு அடாபிடித்தனம் செய்துவந்தனர், இலங்கையைப்போல 30 லட்சம் கூட அல்ல அவர்கள்! 16 லட்சம் தான்!! ஒரேபிடியாக இருந்து, கடைசியில் இஸ்ரேல் என்கிற தனிநாட்டைப்பெற்று, இன்று ஐக்கியநாடுகள் சபையிலும் அங்கம் வகித்துவருகிறது. யூதமக்களுக்குக்கேடுகள் ஏற்பட்டபோது, அவர்கள் சார்பில்; வாதாட ஐக்கிய நாடுகள்சபையில் பல நாடுகள் முன்வந்தன! பண்டித நேருகூட, இஸ்ரேல் பக்கம் நின்ருர்!! இதனைச் சிங்கள நாட்டின் பார்லிமெண்டு உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டி, **"ஒரே மொழி என்ருல், இருநாடுகள்! இருமொழிகள் என்ருல் ஒரேநாடு!!"** என்று முழக்கமிட்டிருக்கிருர். அந்தளவுக்கு, நிலைமை செல்லாமல், இலங்கை அரசு, பார்த்துக் கொள்ளவேண்டும் என்பது நம்முடைய ஆவல்.

பஞ்சாபிலிருந்து வந்த அகதிகளுக்கென, இன்னும் தில்லி அரசு, நாளொன்றுக்கு இலட்ச ரூபாய் செலவழித்து வருகிறது· இதுவரையில் 400 கோடி ரூபாய்க்குமேல், செலவழிக்கப்பட்டிருக்கிறது!! காங்கோவில் நடைபெறும் அட்டூழியத்தைக்கேள்வியுற்று, தயாள் என்கிற தன் பிரதிநிதியையே நிறுத்தி, போதாதென்று இந்தகிழமை 4500 படைவீரர்களையும் தமிழர் ராஜா என்பாரின் தலைமையில், அனுப்பிவைத்திருக்கிறது!!

அந்தளவுக்குக் கடுமையான நடவடிக்கைகள் எதையும் கூட எடுக்கவேண்டாம்-நாமும் விரும்பமாட்டோம்- இலங்கைத் தமிழர்களும் ஏற்கமாட்டார்கள். அவர்கள்சார்பில், அண்மையில். தன்னைச் சந்தித்த இலங்கைப் பிரதமர் சிரிமாவேவிடம் ஒரு சொல் உதிர்த்திருக்கலாகாதா, பண்டித நேரு! வேண்டாம், இவ்வளவு பெரிய 'அறப்போர்' இலங்கையில்நடந்து கொண்டிருக்கும்இந்த நேரத்தில்தான் இலண்டனில் கூடிடும் "காமன் வெல்த்" மாநாட்டில் தினசரி சந்திக்கின்றனர், சிரிமாவோம் நேருவும்! அக்கரை யிருக்குமாயின், ஒரு வார்த்தை பேசலாகாதா? அல்லது, காமன்வெல்த் மாநாட்டிலேயே, கண்டித்து, விளக்கம் கேட்கக் கூடாதா?

நேருவுக்கு, உள்ள நிலைமையைப் பற்றி மனத்துடிப்பு, ஏற்பட வழியில்லை! ஏனெனில், இது தமிழர் தம் பிரச்னை. வேண்டுமென்று கூட அல்ல, தமிழர் தம் முரலின் உண்மையினை உணரும் ஆசை ஏற்படும் வழிகூடக் கிடையாது அவருக்கு. அதனை, எடுத்துச் சொல்லவோ, இங்கிருக்கும் காமராசர் அரசு, அஞ்சுகிறது.

**"அநாதைகள் அல்ல, அவர்கள். கேடுற்றவர்களுக்குப் பரிதா**பம் காட்ட, ஒரு அரசு இருக்கிறது," என்கிற அச்சமாவது, இருக்குமன்ருே! தமிழருக்கும் ஒரு தைரியம் ஏற்பாடு மன்ருே!!!

இதனை, தி. மு, க. தலைமைக் கழகச் சார்பில் சென்னைக் கடற்கரையில் 13 ந் தேதி நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், கலந்து கொண்டு தலைமைவகித்த கே. எ. மதியழகன் எடுத்துச் சொன்னுர். மு. கருணுநிதி, க. அன்பழகன், எம். பி. சுப்பிரமணியம், எஸ். எம். அண்ணுமலை ஆசைத்தம்பி, எம். செல்வராசு முதலிய சட்டமன்ற உறுப்பினர்களும், துணை மேயர் செல்வராசனும், தோழர்கள் என் வி. நடராசன், டி. கே. சீனுவாசன், கே. ஆர். இராமசாமி எம். எல். சி' பில்லப்பன், டி. வி. நாராயணசாமி, அ. செல்வராசன், அரங்கண்ணல் ஆகியோரும், பேசிய அப் பொதுக் கூட்டத்தில், திராவிடத்தின் தலைவர் அறிஞர் அண்ணு தெளிவாகச் சொன்னுர். கூட்டத்துக்கான ஏற்பாடுகளை சு. பாலன் எம். சி. மாவட்டக் கழகப் பொருளாளர் டி. கே. கபாலி. எம். சி. ஆகியோர், நல்ல முறையில் செய்திருந்தனர்.

---

அறிஞர் அண்ணுவின் குரல், தென்னகத்தின் குரலாகும்' அவருடைய உரையினை, கலங்கும் இலங்கையின் கண்ணியமிக்கத் தோழர்களுக்கு, காணிக்கையாக்குகிருேம்—"அறப்போர் வெல்க! அன்பு வழியிலே, செல்க!", என்று சொல்லி.

**"ஒன்று, தமிழர்கள் கண்ணுக்கெட்டாத தொலைவில் கடல்கடந்து வாழ்ந்தாலும் அவர்களைப் பற்றிக் கவலைப்படுவது தி. மு. க. தான்**

**"நமக்கென்று இருப்பது, இன மரபு அறிந்தது, தி. மு. க. ஒன்று தான் என்ற உணர்வு அந்தத் தமிழர்கட்கு ஏற்பட்டுள்ளது இரண்டாவதாகும்.**

"மூன்று, அவர்களுக்கெல்லாம் நாம் தரக்கூடியது அனுதாபச் செய்தியும் ஆறுதல் செய்தியும், வாழ்த்தும் நல்லுரையும்தான்.

"வீழ்ந்துபட்ட தமிழர்களுக்கும் விரட்டியடிக்கப்படும் தமிழர்கட்கும் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையில் நமது கண்ணீரைக் காணிக்கை யாக்குவோம், தாயிழந்து தவிக்கும் தனயனும், மகனை இழந்த தகப்பனும், அண்ணனைப் பறிகொடுத்த தம்பியும், தம்பியைப் பிரிந்த அண்ணனும், இப்படியாக, ஒரு கூப்பிடு தொலைவிலுள்ள இலங்கையில் இருந்து கொண்டு கொட்டும் கண்ணீருடனும், குமுறும் நெஞ்சத்தோடும் 30-இலட்சம் தமிழர்கள் வாடுகிருர்கள். அங்குள்ள தமிழ்ப் பெருங்குடி மக்கள் தணலிலிட்ட தங்கம்போல் உருகுகிருர்கள்; அவர்கள் படும் துயரம் பற்றிய செய்தி தரணியெல்லாம் பரவுகிறது; ஆனுல் இங்குள்ள அரசினருக்கு ஏனே எட்டவில்லை. விரைவில் இலங்கைத் தமிழர்கள் வெற்றிபெறுவார்கள் என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் ஆழ்ந்துஇடம் பெற்றிருக்கிறது."

---



அமெரிக்க நாட்டின், டென்னிஸ் பந்தாட்ட சேம்பியன் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மிமி, தன் தந்தையிடம் பெற்ற பரிசினை அகமகிழ்வுடன் காட்டிக்கொண்டிருக்கிருர்! 15 வயதுள்ள தன் மகள் மிமியின் சாதனையைக் கண்டு வியக்கும் தந்தை வேறுயாருமல்ல, பிரபல ஆலிவுட் நடிகரான **பால் கென்ரீட்!!**

# ‘அறப்போர்’ பெற்ற முதல் சந்தா !

அரங்கண்ணல்

இயக்கத்தைச் சார்ந்த தோழர் எவரும் ஏழடுக்கு மாளிகைக்கு உரியவரோ, ஆயிரத்தையும் நூற்றையும் அள்ளிவீசிடுமளவுக்குச் செல்வந்தரோ, அப்பனும் பாட்டனும் சம்பாதித்து வைத்த சொத்தில் சுகவாழ்வு அனுபவித்த நேரம் போக மீதி நேரத்தைச் செலவழிக்க வகைதெரியாமல் கழகத்துக்கு வந்தவரோ அல்ல. உழைத்துப் பிழைப்போர்! ஒவ்வொரு நாளும் பாடுபட்டால்தான் வீட்டு உலை எரியும் என்கிற அளவுக்கு ஏழ்மை நிலையிலிருப்போர்! அச்சத்துக்கும் ஆசைக்கும் இடையிலே அல்லாடும் மத்தியதரவர்க்கத்தினர்! ஆலைத்தொழிலாளிகள், சின்னஞ்சிறு கழனிகளுக்குச் சொந்தமான விவசாயிகள், அந்த நிலம்கூட இல்லாமல் அன்றாடம் கூலிக்கு உழைத்து கும்பிகழுவோர், அலுவலகங்களில் கணக்கர்கள், பெட்டிக்கடை வியாபாரிகள், பெருமுதல் போடுதற்கு வழியின்றி கைமுதல் போட்டு ‘முதலாளி’ எனும் பெயரைத் தவிர வேறெந்த மிச்சமும் அறியாத கடைக்காரர்கள்!!

கழகத் தோழர் ஒவ்வொருவரும் தத்தமது குடும்பமெனும் அச்சாணியில்லாத தேரை அசைத்துத் தள்ளிக்கொண்டு அதே சமயம், நெஞ்சிலேந்தியநல்லதொரு கொள்கைக்காகப் பாடுபடுகின்றனர். இப்படிப்பாடு படும்போது, எத்தனையோ கூலி நாட்களை அவர்கள் இழக்க நேருகின்றது, அவர்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை. இயக்கம் நல்லதொரு பணிக்காக, ‘காசு தருக’ எனும்போது, மனைவியின் கூந்தலுக்கு மலர் வாங்காவிடினும் பரவாயில்லை, மழலைக்கு ஒரு சீப்பு வாழைப்பழம் வாங்கித் தருவதினும் மேலானது நமது கொள்கை வளர கொடுக்கும் பணம் எனும் நல்லாசையோடு, நல்குகின்றனர்.

அவர்களைப் பார்த்து, உங்களிலே ஒருவனுன, தொண்டனுக்குத்தரவேண்டிய உற்சாகத்தை, அன்பைக் கொடுங்கள் என்று நான் கேட்கிறேன்! ... இப்படிக் கேட்பதில், எனக்குவெட்கமில்லை. ஏனெனில், கேளாரும் கொடுப்பாரும் இல்லாத ஒரு சமத்துவ சமுதாயத்திலா நாம் இருக்கிரோம்? இல்லையே!!

“அறப்போர்”, ஏட்டினை, இலட்சியமும் என் தொழிலும் பின்னிப் பிணைந்த கழக முரசமாகக் கொண்டுவர ஆசைப்பட்டு, விளம்பரம்செய்ய ஆரம்பித்ததும், ‘முதல் சந்தாவாக’ காஞ்சீபுரத்தைச் சார்ந்த தோழர் வெ. சம்பந்தம் அனுப்பியிருக்கிரார். அந்தச் சந்தாத்தொகை ஆண்டு ஒன்றுக்குரிய ரூபாய் எட்டுதான். அதனை நான் எண்ணூறு கோடியாகமதிக்கிறேன். காஞ்சிபுரத்தில் வாழ்ந்த பத்து ஆண்டுகளில் பழக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான அண்ணன் தம்பிகளில், சம்பந்தமும் ஒருவர். சீமானல்ல! சாதாரண அச்சுத் தொழிலாளி!! ‘திராவிடநாடு’ அலுவலகத்திலும், பணியாற்றினர். அதுமட்டுமல்ல, திராவிட கழகமாக இருந்த காலத்தில், திருவத்திபுரம் எனும் ஊரில் ‘இரண்யன்’ நாடகத்தைப் போட்டுத் தடைமீறி, குழந்தைகளையும் குடும்பத்தையும் பற்றி எண்ணுமல், ஆறுமாதம் கடும் சிறை ஏற்ற காளை. உழைத்துப் பிழைப்பவர்! அவர் அனுப்பினர் ரூபாய் எட்டு என்று என் அலுவலகத் தோழர் சொன்னதும், எனக்கு உண்மையிலேயே பெருமையாயிருந்தது.

ஏடுகள் ஆடும் நிலையிலிருக்கிற காலம், இது. அரசாங்கத்தின் பத்திரிகைக் ‘கோட்டா’ முறை, கோடீசுரர்களுக்குப் பயன்படுமேயன்றி, சிறு ஏடுகளின் குரல்வளையை நெறிக்கும் ஏற்பாடு போல் இருந்துவருகிறது. இந்த நிலையில், நல்லதொரு ஏடு கொணரவேண்டுமாயின் நாலாறு செலவுகள் உள்ளன. எங்கோ பெற்ற முதலைக் கொணர்ந்து போட்டு இரவு பகல் விழித்து எழுதிவிட்டால் மட்டும் போதாது, ஏடும் வாழ்ந்துவிட முடியாது. ஒருஏட்டுக்கு இடையூறில்லாதநிலைமலர, எத்தனை சந்தாக்கள் சேருகின்றனவோ, அவ்வளவும், உயிர்கொடுக்கும் ஒவ்வொரு இருதயங்களாகும். அதை உணர்ந்ததாலேயே, நண்பர் சம்பந்தம், ரூபாய் எட்டை எனக்கு அவசர அவசரமாக அனுப்பியிருக்கிருர். கடிதமும் எழுதியிருக்கிருர், இன்னும் பலரைச்சேர்த்து சேர்த்து அனுப்புகிறேன், என்று. இப்படிப்பட்ட அண்ணன் தம்பிகள், எனக்கு, காஞ்சியில் மட்டுமல்ல, நாடெங்கும் உள்ளனர்! அவர்கள் எல்லாம், என் ஏட்டுக்கு, இருதயதானம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ‘சீமான்வீட்டுப்பணம் குஷ்டரோகியின் கைபட்டதுபோல!’ என்ருர், ஒரு முறை அறிஞர் அண்ணு. நான், குஷ்டரோகிகளை, கேட்கவில்லை! நம்மிடமும் கிடையாது, டாடாவும் பிர்லாவும்!! என்குடும்பத்தைக்கேட்பதில், எனக்கென்ன தலையிறக்கம்? ஓராண்டுசந்தா உங்கள் ஏட்டுக்கான வளர்ச்சி, என்று சொல்வதில், எனக்கென்ன அவமானம்... ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொண்டு, அதேசமயத்தில் இலட்சிய வெற்றிக்குப் பாடுபடத்தானே நம்மை நாம் அர்ப்பணித்துக் கொண்டிருகிறோம்? இல்லையா, சகோதரர்களே!!

முதல்சந்தா’ வைத்தொடர்ந்து, என்பணியிலும், என்மீதும் அக்கரைகொண்ட, அண்ணன் தம்பிகள், பலர், இயன்றதைச் செய்யும் எண்ணத்துடன், ஆண்டுச் சந்தா அனுப்பியிருக்கின்றனர். அவர்களது, பெயர்களைப் பெருமையுடன், வெளியிடப் போகிறேன், ஒவ்வொரு கிழமையும். இந்த கிழமை அனுப்பியவர்கள்:

2 வடிவேலு, (எண்ணெய் வியாபாரம்) சிதம்பரம்.
3 ஆர். துரை கவுண்டம் பாடி
4 அ. சங்கரன்
தி. மு. க. செயலாளர்,
சகக்ம்மாள் புரம்
5 எம். கிருஷ்ணமூர்த்தி,
பஞ்சாயத்து போர்டு
துணைத்தலைவர்,
குருவிக்கரம்பை
6 வி. பொன்னையன்
துணைச் செயலாளர்,
பேராவூரணி
7 கணேசன்
இளைஞர் மன்றம்,
கருவேந்திநாதபுரம்
8 எம். சுந்தரராஜன்,
சுந்தரம்மோட்டார்ஒர்க்ஸ்,
சித்தூர் (ஆந்திரா).
9 இ. சி. நக்கீரன் குர்லா,
பம்பாய்-7.
10 இரா. அறவாழி (புண்யகோடி)
மடுக்கரை
11 வி. எம். புவியரசு விக்கிரவாண்டி
12 ஞானசேகரன்
போர்டு உயர்நிலைப்பள்ளி
காட்பாடி.
13 சு. நாகராசன் சுருளிப்பட்டி
14 பாஸ்கர சேதுபதி
மணக்குடி அ. நி.

## ‘சந்தா’ பெருகட்டும்!

“பத்திரிகைகள் இல்லாமல் அரசாங்கம் இருப்பதா அல்லது அரசாங்கம் இல்லாமல் பத்திரிகைகள் இருப்பதா என்ற கேள்வியை என்னிடம் கேட்டால் அரசாங்கம் இல்லாமல் பத்திரிகை இருக்க வேண்டும் எனக் கூறுவதில் நான் சிறிதும் தயங்கமாட்டேன்” என்கிருர் அமெரிக்க அறிஞர் தாமஸ் ஜெபர்சன். மேலைநாடுகளில் பத்திரிகையை நான்காவது எஸ்டேட் எனக் குறிப்பிடுகின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த பத்திரிகைக்கு நேரடியான தூயதமிழ்ச் சொல் ‘தாளிகை’ ஆகும். இந்தத் தாளிகை என்ற சொல்லைக்கூட கடல்கடந்து வாழும் மலேயாத் தமிழன்தான் சிங்கப்பூர் தமிழ் முரசு மலர் மூலம் நமக்குத் தெரிவிக்கிருன்.

ஒரு நாட்டில் சனநாயகம் வளர வேண்டுமானல் ஆளுங்கட்சிக்கு எதிராகக் குறைந்தது ஒரு கட்சியாவது இருக்கவேண்டும். எதிர் கட்சி இல்லாத நாட்டில் சனநாயகம் வளர வழியில்லை. அரசியலில் எதிர்க்கட்சிகளுக்கு ஒரு இடங்கூடக் கிடைக்காத காலத்தில் தாளிகையே எதிர்க் கட்சி ஆகும் ஆனல் எதிர்க்கட்சியே இல்லாத நாடான சோவியத் ரஷ்யா இதற்கு விதிவிலக்காகும். மேலும் ரஷ்யாவில் எந்த ஒரு தாளிகையும் தன் சொந்தக் கருத்தை வெளியிட முடியாது. ரஷ்யாவில் இதழ்கள் அனைத்தும் அரசாங்கதின் கருத்தையே பிரதிபலிக்கின்றன.

உலகத்துச் சிறந்த எந்த எழுத்தாளனை எடுத்துக்கொண்டாலும், சுரண்டலைத்தான் தன் எழுத்து மூலம் சாடியிருக்கிருன். ஆனல் சுரண்டல் பலவிதங்களில் இருக்கலாம். விக்டர் யூகோவின் லோம்கிரி பாமர மக்கள் பட்டினியால் பரிதவிக்க, ஒரு சில பிரபுக்கள் உல்லாச வாழ்வு வாழ்ந்த காதையை உணர்த்துகிறது. சார்லஸ் டிக்கன்சனின் இருநகரக் கதை காதலின் மகத்துவத்தை மாத்திரமல்ல-பதினெட்டாம் நூற்ருண்டில் மேலைநாட்டில் நிலவிய பஞ்சத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது. நாட்டர்டேம் கூனனின் கதை மதச் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறது. பள்ளியிலே படிக்க வேண்டிய மாணவர்கள் ‘பிக்பாக்கெட்’ பேர்வழிகளாக வாழ்ந்த அவலநிலையை ‘ஆலிவர்டிவிஸ்ட்’ அறிமுகப்படுத்துகிறது. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் எல்லாச் சுரண்டலையுமே ஓரளவிற்கு எடுத்துக்காட்டுகின்றன. மக்களைச் சுரண்டி மன்னனுக வாழ விரும்பியவர்களுக்கு கல்லறை கட்டுகிருன், ஹாம்லெட். காதலைச் சுரண்டி வாழ விரும்பிய கிளியோபாத்ராவிற்கு நச்சுப்பாம்பு நல்ல தீர்ப்பளிக்கிறது. பழச்சாறு அருந்தும் பணக்காரனும், பழைய சோறு உண்ணும் ஏழையும் ஒரே சுடுகாட்டிற்குத் தான் செல்கின்றனர் என்ற கருத்தை ஒரே மேசையில் இருதட்டுகள்!’ என்றவரி மூலம்ஷேக்ஸ்பியர் உணர்த்துகிருர். மார்க்சின் மூலதனம்முதலாளிகளின் அஜீரணத்திற்கு ஆமணக்கு எண்ணெய் அளிக்கிறது. மோசசின் பத்து கட்டளைகள் இனச் சுரண்டலுக்குச் சாவுமணி அடிக்கிறது. அறிஞர் அண்ணுவின் பணத்தோட்டம் வடநாட்டுச் சுரண்டலை எதிர்த்து உரிமை முழக்கம் செய்கிறது. அந்தப் பாதையில்தான் அரங்கண்ணல் அவர்களும்வடநாட்டுச்சுரண்டலை எதிர்த்து அறப்போர், தொடங்கியுள்ளார்.

‘குணம் நாடிக் குற்றம் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்’ என்ற வள்ளுவர் வாக்கிற்கு உதாரணமாக விளங்கும் வகையில் அரங்கண்ணல் புதிய தாளிகை ஒன்றை திராவிடத்தில் உலாவரச் செய்துள்ளார். அரங்கண்ணலின் அறப்போர் ஆரம்பமாகிவிட்டது! சரிந்த சமுதாயத்தின் இருள் விலகட்டும்! சந்தாதாரர் தொகை நாளும் வளரட்டும்!!!

உங்கள்,
புதுமைப்பித்தன்
சேந்தமங்கலம். பி ஒ.

### மணப்பாறை மாணவர்

மணப்பாறை உயர்நிலை தி. மா. மு. க. ஆண்டு அமைப்புத் தேர்தல் வெ. கதிரவன் தலைமையில் நடைபெற்ற போது தலைவராக பெ. வேலுசாமி, செயலாளர் க. இரும் பொறை; துணைச்செயலாளர் வை. முனியாண்டி; பொருளாளர்: வீராசாமி, மேலும் 11 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொருகவிஞர். . நற்றமிழ் இவர் பேனு மூலம் மணம் வீசுகிறது), எஸ். டி. ஜி. இராமன், மதுரை கா. ரே. சுப்ரமணியம், இ. கிருட்டிணன், கோ. முத்து கிருட்டினன், பி. பால சுப்பிரமண்யம் பிஎஸ். சி, மதனகோபால் பி. காம், க. சிவகுமரன், தோழியர்சற்குணம்......"

"யார்? நமது மேடைகளில் முரசொலிக்கக்கேட்கிறோமே!"

"ஆமாம் அதே சற்குணம் தான்! புதுவை ஆறுமுகம், வெ, கிருட்டினமூர்த்தி எம். ஏ. பி. எல், டி. கே. கோபாலகிருட்டினன். ப. நெடுமாறன், டி. கே. பொன்னுவேலு......"

"எந்தப் பொன்னுவேலு? முன்பு மாணவர் கழகப் பொதுச்செயலாளராயிருந்தாரே. அவர் தானே?"

"அவரே தான். மாநாட்டின் இன்னொரு செயலாளர் இரத்தின சபாபதி, பொருளாளர் எஸ். ஆர். பாலசுப்ரமணியம், தோப்பூர் திருவேங்கிடம்; கா, சுப்பிரமணியன் ...... ஆகியோரை யெல்லாம் நான் சந்தித்தேன்........."

"சரி, மாணவர் கழக மாநாட்டில், என்ன பேசினார்கள்? திராவிட முன்னேற்றக் கழகப் பொது மேடைகளில் பேசுவதைப் போலத்தானே!!"

"அப்படித்தான் அறியாதவர்கள் நினைப்பார்கள்; தெரியாதவர்கள் சொல்வார்கள். திராவிட நாடு வாங்க், தீரமிக்க மாணவர்களே செல்வோம் எல்லோரும் கல்லூரிகளை விட்டு — என்று அவர்கள் பேசவில்லை. ஆளும் கட்சியைப்பற்றிக்கூட அல்ல, ஆட்சிமுறைகள் எத்தனை விதம், அவைகள் எங்கெங்கே எப்படியெப்படி இருக்கின்றன, வளரும் தமிழுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் என்ன, விடுதலை பெற்ற நாடுகள் எவையெவை— விடுதலையென்றால் என்ன, இப்படி பொதுவாகத்தான் பேசினார்கள்......அட! என்னப்பா, நீ, இருந்தாற்போலிருந்து இப்படிச் சிரிக்கிறாய்? பல் சுளுக்கிக்கொள்ளப்போகிறது! யோ, ஆசிரியரே! அட, நிறுத்தப்பா, சிரிப்பை...... எதை நினைத்துக்கொண்டு இப்படிச் சிரிக்கிறாய்..."

"இல்லை வீரா! காளை வயதினரும், களங்கமிலா மனதினரும் கூடிய கோலாகலத்தைப்பற்றி நீ கூறிக்கொண்டே வரும்போது, காட்டுப் பருவமதில் காலடி வைத்துக்கொண்டிருக்கும் காமராஜரும் கக்கனும், பக்தவத்சலமும், அளகேசனும், கச்சியம்பதியிலே, காங்கிரஸ் மாணவர் மாநாடு என்று ஒன்று போட்டு, அங்கே கத்தியிருப்பதை நினைத்தேன், சிரிப்பு வந்துவிட்டது"

"மாணவர் மாநாட்டில், வயதானவர்களுக்கு என்ன வேலை? அதிலும் இரண்டாண்டுகளுக்கு முன்புதானே, நேரடியாக மாணவர்களை அரசியலில் பங்குகொள்ளச் செய்யக்கூடாது என்று அமைச்சர் சுப்பிரமணியமும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் கூடி ஒரு முடிவுக்கு வந்தனர்......"

"வந்தால்! அதை காமராஜர் கடைப்பிடிக்க வேண்டுமென்று, என்ன நியாயம்!! எப்போது, அவர் சொன்ன சொல்லை மறக்காமலிருந்திருக்கிறார்? காப்பிக் கடை திறப்பு விழாவானாலும், சாக்கடை அமைப்பு விழாவானாலும், எதிலும் போய் ஏன் கலந்துகொள்கிறார்? தி. மு. க.வை திட்டத்தானே! காஞ்சியில் கூடிய மாணவர் மாநாட்டிலும்......" என்ன பேசினாராம் தெரியுமா? இந்த தினா மூனா கானாக்கள் கூடிய சீக்கிரம் தீர்ந்துவிடுவார்கள். அவுங்களுக்குள்ளேயே இப்ப சண்டை வந்துடுச்சி, சண்டை......"

"வேறு எதை காமராஜரிடம் எதிர்பார்க்கமுடியும்? படித்துப் பட்டம் பெற்ற பக்தவத்சலமும், அளகேசனும், அரசியல் கலவாமல் புதுமைகளைப்பற்றியும் உலகம் வளர்வதுபற்றியும், பேசினார்களாமா?"

"அவர்களும், தி. மு. க.வைப் பற்றித்தான் திட்டு திட்டென்று திட்டினார்களாம்......"

"அதற்குப் பெயர் காங்கிரஸ் மாணவர் மாநாடா...?"

"என்ன செய்வது' அறிஞர் அண்ணாதான், ஒரு வாக்குக் கொடுத்துவிட்டால், அதன்படி நடக்கவேண்டும் என்று எண்ணுகிறார். அரசியலில் மாணவர்களை நேரடியாக பங்குகொள்ளச் செய்வது தீது, படித்துத் தேர்ந்தபின் அவர்கள் விருப்பப்படி பாதையை வகுத்துக்கொள்வதே சரி என்று மனமார நம்பி, தானும் கலந்து கொள்ளாமல், நம்மைப்போன்றவர்களையும் கலந்துகொள்ளக் கூடாதெனத் தடுத்துவைத்திருக்கிறார். தமிழ்நாட்டுக் காங்கிரசில், 'அறிஞரா'யிருக்கிறார் — அளகேசன்தானே! அதுவும் காமராஜருக்கு அடங்கிய தலைவர்!! வேறென்ன நடக்கும்?"

"...இருந்தாலும், சொன்ன சொல்லை மறந்துவிட்டு, இந்தக் காங்கிரஸ் மந்திரிகள், தாங்களே போய், இப்படியெல்லாம் மாணவர்களைக் குழப்புவது..."

"'ம' எனும் சொல்லில் ஆரம்பிக்கும் எல்லா தமிழ்ச் சொற்களையும் சொல்லி நீ வர்ணித்தாலும் சரி, அதைப் பொருட்படுத்தக்கூடியவர்கள், அங்கே யாரும் இல்லை. "அதையும் பார்! இதையும் பார்! யார் அரசியலில் நாணயமானவர்கள்; சொன்ன சொற்படி நடப்பவர்கள்" என்று, நாம் மக்களிடந்தான் சொல்லவேண்டும்"

## தம்பியின் ஏடு



நாமறிந்த மட்டில் தம்பி அரங்கண்ணல் நல்லொழுக்கம், சிரித்தமுகம். எழுத்தறிவு, கருத்துச் செறிவு, எண்ணங்களில் நீரோடை ஓட்டம் ஆகிய அத்தனைச் சிறப்புகளும் அமையப்பெற்றவர்.

அறிஞர் அண்ணாவின் அருமைத் தொண்டர்களில் எழுத்துலகத்தொண்டில் முதலிடம் பெற்றவர் என்பதை நாடறியுமாதலால் நான் சொல்லத் தேவையில்லை.

அவர் தூய உள்ளம் 'என்றும்' மறப்போரைக் காணாது, அதுதீதென்ற காரணத்தால். ஆகவே தான் அறப்போர் தொடங்கியிருக்கிறார். யார் யாரோ எந்தெந்தப் போருக்கோ அழைத்து அவ்வளவும் அக்கப் போராக முடிந்திருப்பதை அரசியல் அகராதியில் கண்ட நம் கழகம் தம்பி அரங்கண்ணலை அறப்போரை நடத்தத்தூண்டியிருக்கிறது. அறப்போரை வெறுப்போரைப் பற்றி நாம் கவலைப் படவேண்டாம் 'அறப்போர் விடுதலையைப் பெற்றுத்தருகிற பெரும்பணியில் ஈடுபட்டிருக்கின்றது என்பதால் நாம் காட்டுகின்ற கைம்மாறு அதை ஆதரிப்பது தான் என்பது தவிர வேறில்லை.

அன்பன்,
சி. பி. சிற்றரசு.
தி. மு. க. வெளியீட்டுச் செயலாளர்.

## அறப்போர் வாழ்க !


குட்டுவன் எம். ஏ.

எழில்மிக்க தமிழகமும் இன்பம் சான்ற
இளங்குழவிக் கேரளமும் தெலுங்க நாடும்
வழியோடு கன்னடமும் உலகம் போற்றும்
வனப்பொழுகும் திருவிடமாய் வடிவம் பெற்று
மொழிமுறையால் ஒன்றாகி முகழ்த்து நின்று
முன்னணியில் ஒளிர்கின்ற காட்சி காண
அழகொழுகும் தமிழ்கொழிக்க அமைந்த ஏடாம்
'அறப்போரே' ஆல்போலத் தழைத்து வாழ்க!!
அறிஞர்பலர் ஆராய்ந்த கருத்துக் கோவை

அருங்கவிஞர் ஈன்றெடுத்த அழகுப் பாடல்
நெறியமைந்த நெடுங்கதைகள் நில்வைப் போல
நிழல்காலும் இனியநடை குறிக்கோள் யாவும்
செறிகின்ற சிறுகதைகள் சிந்தை யள்ளும்
சீரான தமிழ்ப்படைப்புச் சிறியோர் தம்மைப்
பொறிவாயில் அடைக்கின்ற புதிய ஏடாம்
புகழோங்கும் 'அறப்போரே' பொலிந்து வாழ்க !!!



# சுட்ட நிலா




மாஸ்கரேட் பிரபுவின் மனம், எரிமலையாயிற்று. கழுத்தை நெறித்து இந்தக் காதகியைக் கொன்றுவிட்டால் என்ன, என்று ஒருகணம் நினைத்தான். பிறகு! இந்தச் சேதி ஊருக்குத் தெரிந்தால்? அய்யோ, அதைவிட வேறு அவமானமே வேண்டியதில்லை! அப்பழுக்கு சொல்லமுடியாமல் வாழ்ந்த குடும்பம், அவனுடையது. அங்கே, இப்படி ஒரு மாசு என்றால்! தூசுபோலப் போய் விடுமே குடும்பப் பெருமை? அது மட்டுமா! பிறகு, தன் குழந்தைகளையுமன்றோ பழி சூழும். அவளையும் கொன்றுவிட்டு, தானும் செத்துவிடலாம். அவளுக்குப் பிறகு உண்டாகும் அவமானத்தைத் தாங்கிக்கொண்டு வாழ, அவனால் முடியாது. ஆனால், குழந்தைகளின் கதி! அவர்களுடைய எதிர்காலம்!! எப்படியோ போகட்டும் என்று எந்தத் தந்தையால் எண்ணிடமுடியும்? இருதயத்திலுண்டான வேகத்தை, அவனுடைய விவேக உணர்ச்சி அடக்கியது. எந்தப் பதிலும் சொல்லாமல், அசையும் எரிமலையென நடந்துவந்து வண்டியில் உட்கார்ந்தான். நடமாடும் நாசம் என அவன் நினைத்த கேபீரியலோ, அவனுக்கு முன்னதாகவே, செல்வச் சிங்காரியென வண்டிக்கு வந்து அமர்ந்திருந்தாள்.

பனிக்கட்டியின் அருகே யிருப்பதுபோல் இத்தனைநாளும் எண்ணிய அவனுக்கு, இன்று அவள் பாம்பாகத் தென்பட்டாள்; வேம்பாகக் கசந்தாள்; வேங்கையாக விளங்கினாள். அவளருகில், எங்கே நெருங்கி உட்கார்ந்துவிடுவோமோ என்று பயந்து தள்ளி ஒதுங்கியே அமர்ந்தான். கொஞ்ச நேரத்துக்கு முன்பு, தான் விலக விலக அவன் நெருங்கி நெருங்கி உட்கார்ந்தான். தன் உடல்மீது உராய்வதைப் பேரின்பமாக நினைத்தான். அதே கணவன், இப்போது, அஞ்சி அஞ்சி நகர்கிறான். அவளுடைய வதனத்தில், புன்சிரிப்பின் ரேகை ஓடியது. மனதுக்குள்ளேயே, ஆண்களின் விசித்திரமான உள்ளத்தினை எண்ணியவளாய் மௌனமாக இருந்தாள். அந்த அமைதியைக் கலைப்பதுபோல், 'கோச்சில் இருந்த மாஸ்கரட், வெளியே பார்ப்பதும், பெருமூச்செறிவதுமாக இருந்தான். உண்மையில், அவனைப் பார்க்கும் யாரும் அந்த நேரம் அனுதாபமே கொள்வார்கள். ஆனால், கேபீரியேல், 'படட்டும், படட்டும்' என்றே இருந்தாள், அப்பப்ப, என்ன பெண் மனம்! அன்பு காட்டுவதிலும் அவ்வளவு தீவிரமாயிருக்கிறார்கள்—வஞ்சம் தீர்த்துக்கொள்வதிலும் இவ்வளவு தீவிரமாபிருக்கிறார்களே!!

ஆமாம் — எந்தக் குழந்தை தனக்குப் பிறக்காதது என்றாள்— கடைசிக் குழந்தையையா— இல்லை, இருக்கமுடியாது — அதனிடம் என் சாயல் உள்ளதே— எனக்கு இருப்பதுபோல் உதட்டுக்குமேல் அதற்கும் ஒரு மச்சமிருக்கிறதே—ஒரு வேளை அவள் வேறெந்தக் குழந்தையையாவது சொல்லி, எனக்கிருந்த குழப்பத்தில், கடைசிக் குழந்தை என்று எண்ணிக்கொண்டேனோ—இருக்கும், இருக்கும், என் மூளையே ஒரு நிலையில் இல்லை — இந்த ஐயத்தை யாரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும்? — ஆமாம், இவ்வளவு பாதுகாப்பிலிருந்த இவளுடன் எவனுக்குச் சிநேகம்?—எப்படி இவளுக்கும் அவனுக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கமுடியும்! — இவ்வளவு யோசிக்கும்நான், அவளை, யார் அந்தக் கயவன் என்று கேட்காமல் விட்டுவிட்டேனே — யார், அவன்? — என்ற எண்ணச் சுழற்சிகளிலே அகப்பட்டுத் தவித்த மாஸ்கரேட், இந்த ஐயங்களுக்கான விடையை அவளையே கேட்டுத் தெரிந்துகொள்வது என்கிற முடிவுக்கு வந்து, 'கேபீரியேல்' என்று அழைத்தான்.

"ஏன்?" என்று இறுமாப்போடு கேட்டாள், அவள்.

"எந்தக் குழந்தை? எவன், அவன்?" —இதற்குமேலால், அவனால், பேசமுடியவில்லை. துக்கம், தொண்டையை அடைத்தது. ஒருகணம், அவனை ஏறெடுத்துப் பார்த்தாள் — கேபிரியேல். அவளின் இதழோரங்களில், கேலிச் சிரிப்பு, மீண்டும் தோன்றி மறைந்தது.

'அதைமட்டும் சொல்லிவிடுவேன் என்று எதிர்பார்க்காதீர். நிச்சயம், ஒரு போதும் சொல்ல மாட்டேன். [illegible] பிரபு! பெரிய சீமான்! மெத்தப் படித்தவர்! சுத்தப் புத்தி சாலியியாற்றே! உம்முடைய திறமையால், ஏழில், எதுஉமக்குபிறக்காததுஎன்பதை நீரே கண்டுபிடித்துக்கொள்ளும். குழந்தையைமட்டுமல்ல, அந்தக் குழந்தையை எனக்குக் கொடுத்தவன் யாரென்பதையும், என்னை நீர் கொன்றுபோட்டாலுஞ் சரி, நான் கூறமாட்டேன்!"

இவள் என்னபெண்ணு! இல்லை, கேவலமான சாக்கடைமண்ணு!! கொண்ட கணவனிடம், கண்டவனோடு அலைந்தேன் என்று கூறியதோடு, அவன் படும் வேதனையைத்தன் சாதனையெனக் கருதி மகிழ்ச்சியடைகிறாளே. இருதயம் என்ன இவள் போன்றவர்களுக்குக் கல்லா! இரும்பா!!


* * *

ஆடைகளைக் களைந்துவிட்டு, 'அப்பாடா' என்று அறைக்குள் வந்து சாய்ந்தபொழுது தான், கேபீரியேலுக்கு என்ன ஏற்படுமோ என்கிற அச்சம் உண்டாயிற்று. பாதிவழியிலேயே, அவள் கணவன், நடந்துவருவதாக வண்டியோட்டியிடம் சொல்லிவிட்டு இறங்கிக்கொண்டான். அவன், ஏன் இறங்கினான் என்பது அவளுக்குப்புரியாமலில்லை. இருந்தும், இவ்வளவு நேரமாகியும் இன்னும் வீட்டுக்கு வந்து சேரவில்லையே. இரவு

**ஆங்கிலக் கதை**

மணியோ எட்டாகி விட்டது! எங்கேபோயிருப்பான்? என்ன செய்யலாம் என்று யோசிப்பதற்காக இவ்வளவு நேரம் ஆகிறதா? இல்லை! அவமானத்தைப் பொறுக்க முடியாமல், அவரே, எங்காவதுபோய்...!! இருக்காது, இருக்காது. அவ்வளவு கோழையல்ல, அவர். இருந்தும் ஏன், இன்னும் மாளிகைக்கு வரவில்லை. சாப்பிடும், நேரமாயிற்றே. சரி, சரி வேளைதவறிவந்து, விபரீதமான வேலை எதையோ செய்யத் திட்டமிட்டுத்தான், இன்னும் வரவில்லை. அப்படி என்ன செய்ய முடியும் அவர்? சுட்டுக் கொல்வார்! கொல்வாரா, அவர்—அதற்குத் தைரியமுண்டா? இப்படி ஏதாவது நடக்குமென்று தெரிந்தால், அவரைமிரட்டி, என்னைத் தற்காத்துக்கொள்ளத் தானே போன வாரமே எனக்கென ஒரு 'ரிவால்வர்' வாங்கிவைத்திருக்கிறேன்—அழகான ரிவால்வார், வெள்ளிப் பிடிபோட்டது—ஆமாம், அவர் வந்த அறிகுறியைக் கூடக் காணேமே! என்று யோசித்துக் கொண்டிருந்த அவளின் கவனத்தை, கதவில் யாரோ தட்டிய ஓசை, கலைத்தது. ரிவால்வாரை இரவு அங்கியிலிருந்த பைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு தன் கணவனை, எதிர்நோக்கத் தயாரானாள். தன்னைக் கொல்ல வருவான் அப்படிவந்தால், நீர் கொல்ல முயற்சித்தால், அதற்கு முன்பே சாகநான் தயாராயிருக்கிறேன் என்று சொல்லிமிரட்ட வேண்டியது— அப்படிமிரட்டினால், அஞ்சிவிடுவார். ஒருவேளை அந்த நோக்கமின்றி, தன்னை அடித்து, உதைத்து, "இரகசியத்தை" அறிய முயன்றாலும், சுழல் துப்பாக்கியைக் காட்டி சுட்டுக்கொண்டு செத்துவிடுவேன் என்று சொல்ல வேண்டியது. எதாயினும் சரி, நாம் எதிர்பார்த்த கட்டம் வந்துவிட்டது. என்று எண்ணியவளாய், கதவு திறக்கப் படட்டும் என நின்றாள். கதவு திறந்தது! அவள் எதிர்பார்த்ததற்குமாறாக, பணிப்பெண் நின்றாள். சாப்பாடு தயாராயிருப்பதாகவும், குழந்தைகளுடன் குந்தியிருக்கும் பிரபு அவளுக்காகக் காத்திருப்பதாகவும், அப்பணிப் பெண் தெரிவித்தாள்.


உணவருந்தும் மேசையில், வழக்கம் போல உட்கார்ந்திருந்தான், மாஸ்கரேட். எதிரே அவர்களது மூன்று ஆண்குழந்தைகளும், இன்னொருபக்கம் அவர்களுடைய மூள்று பெண்களும், அவர்களைப் பேணிப்போதிக்கும் ஆசிரியர் ஒருவருகமாக உட்கார்ந்திருந்தனர். குழந்தைகளை உற்று உற்றுப்பார்ப்பதும், பெருமூச்சு விடுவதுமாக வேதனைப்பட்ட வண்ணமிருந்தான் மாஸ்கரேட். கடைசியாகப்பிறந்த கைக்குழந்தையை, மாடி ஓரம் வைத்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தாள், தாதி. எதுதனக்குப் பிறக்காதது, ஏழாவதா, ஆறுவதா, ஐந்தாவதா, நான்காவதா, என்று எண்ணிப்பார்க்கும் போதே, அவன் உடல் எல்லாம் பற்றி எரிந்தது. அப்பா! அப்பா!! என்று அழைத்து, இவனும் இத்தனை நாளும் அன்பைச்சொரிந்த இந்தக் குழந்தைகளில், ஒன்று தன்னுடையதல்ல என்கிற எண்ணத்தையே அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவன் பட்டுக்கொண்டிருக்கும் அவதியைப்பார்த்த வண்ணமே, கேபீரியேலும், வந்து அமர்ந்தாள்.



கலகலவென்று சிரித்துக் கொண்டு, சாப்பிடுவது தான் அவர்கள் வழக்கம். இயற்கைக்கு மாறுதலாக இன்றைய தினம் அப்பாவும் அம்மாவும் இருப்பதைக் குழந்தைகள் கவனித்தன. ஒன்றும் பேசாமல் சாப்பிட்டால், எங்கே தன்னை நாகரீகம் தெரியாதவன் என்று கருதிவிடுவார்களோ என எண்ணிய அந்தக் குழந்தைகளின் அப்பாவி ஆசிரியர், இடையிடையே ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். அவருக்கு எவ்விதப் பதிலும், உபசாரத்துக்குக்கூடச் சொல்லவில்லை, மாஸ்கரேட். கேபிரியேல் மட்டும், நான்குழந்தைகளுக்கு ஒரு பதில்வீதம் சொல்லிக் கொண்டு, எதுவும் நடக்காதது போல் 'பாவனை' செய்துகொண்டிருந்தாள். இவ்வளவுநேரமும் குனிந்தபடியே இருந்தமாஸ்கரேட் நிமிர்ந்தான். கேபிரியேலும், அதேசமயம், அவனைநோக்கினாள். நான்குகண்களும் ஒரே சமயத்தில் சந்தித்தன! தன் பத்தினியின் பார்வையைப் பொறுக்கமுடியவில்லை, அவனால். இவ்வளவு நேரமும் தேக்கிவைத்திருந்தவேதனையையெல்லாம் உருட்டித்திரட்டி அவளிடம் கேள்வியாக நீட்டினான்.

"கேபிரியேல்! இதோயிருக்கும் குழந்தைகள் சாட்சியாகக் கேட்கிறேன். உண்மையைச் சொல். என்னைச் சோதிக்காதே. மாலையில், மாதாகோவிலில், நீ சொன்னது உண்மையா?"

ஒருகணம், கேபிரியேலே, அவன் குரலின் ஆழத்திலிருந்த வேதனையைக் கண்டு மனம் நெகிழ்ந்தாள். என்னபதிலைச் சொல்வது, என்று கொஞ்சம் திகைத்தாள்.



"விண்ணொலி கேட்டான்! வாணொலி படைத்தான்! எதனைக்கண்டான்? பணத்தினைப் படைத்தான்!" என்று சிவாஜி கேட்கிறார், தேவிகாவை புத்தா பிச்சர்சின் "பாவமன்னிப்பு" திரைஓவியத்தில்.

மீண்டும், அவன், அதே கேள்வியைக் கேட்டான். இப்போது அவன் குரலில், கொஞ்சம், ஆத்திரமும் வேகமும் கலந்திருந்தது. அதைக்கண்ட, அவளுடைய "தான்" எனும் அகந்தையும், மீண்டும் உயிர்பெற்றது. அவளை அறியாமலே, அவள்தலை, "ஆம்" என்று அசைந்தது. அவ்வளவு தான்!! எதிரேயிருந்த தட்டை எடுத்து ஓங்கிவீசிவிட்டு, அந்த இடத்தை விட்டு, அவன் போய் விட்டான்.

அப்பாவின் போக்குப் புரியாமல், குழந்தைகள் விழிக்கலாயின. அவைகளிடம் என்னத்தைச் சொல்வது? என்ன பதிலைக் கூறுவது?

"ஒன்றுமில்லை கண்மணிகளே! உங்கள் அப்பாவுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. அதனால்தான் இப்படி நடந்துகொள்கிறார். நீங்கள் ஒன்றும் பயப்படாமல், போய் படுத்துக் கொள்ளுங்கள், எல்லாம் சரியாகிவிடும்."

என்று, அவர்களை அனுப்பினாள். பணிப்பெண்ணிடமும், ஆசிரியரிடமும், எப்போதும் போலப் பேசினாள். 'இரவு வணக்கம்' சொல்லிவிட்டு, தன் அறைககுப்போனாள். தங்கள் அறைக்குப் போய்க்கொண்டிருந்த குழந்தைகளில், மூத்ததை அழைத்து, ஒருதரம் முத்தமிட்டுவிட்டு, நேராகத் தன் அறைக்குச் சென்றாள்.

இப்போதாவது, நேராக வருவான்—சண்டை பிடிப்பான்—குத்துவேன், — வெட்டுவேன்—கூறடி உண்மையை, எனக்குதிப்பான், என்று எதிர்பார்த்தாள்.

அவன் வரவில்லை! அதற்குப் பதில் அவனனுப்பியஒருகடிதம்வந்தது!! அந்தக்கடிதத்தைப் பணிப்பெண் கொண்டுவந்து கொடுத்தாள். என்ன எழுதியிருந்தான், அவள் கணவன்? ஏன், அவள் கண்கள், அப்படி விரிகின்றன? ஏன், பெருமூச்சோடு, இப்படியும் அப்படியும் பார்க்கிறாள்?

(தொடரும்)



"நதிகள் பல உண்டு. அவைகள் சங்கமாவது கடலில்! அதேபோல, மதங்கள் பல இருந்தாலும், அவை மனிதனை அழைத்தேகும் இடம் அன்பெனும் கோயிலுக்குத் தான்!" எனும் உயரிய இல்ட்சியத்தோடு, டைரக்டர் பீம்சிங் உருவாக்கியிருக்கும் உன்னதப் படைப்பு 'பாவமன்னிப்பு' காலங்களிலே, இவள் வசந்தம்! என்று சாவித்திரியிடம் பாடுகிறார், ஜெமினி.

## கவனிக்கவும்

முன் பணமின்றி, அதிகப் பிரதிகளுக்கு வரும் கடிதங்களை, கவனிக்க இயலாது.

முதல் இதழ், கைவசமில்லை, அதிகப் பிரதி பற்றிய கடிதங்கள் செவ்வாய்க்குள் கிடைக்கவேண்டும்,

பொறுப்பாளர்
"அறப்போர்"

அ. நகர் மாணவர்.

திராவிட மாணவமுன்னேற்றக் கழக இவ்வாண்டு அமைப்புத் தேர்தல், முன்னாள் செயலாளர் த. கந்தசாமி தலைமையில் நடந்தபோது, செயலாளராக கோ. சோமசுந்தரமும், துணைச் செயலாளராக அ. தேவராசனும், பொருளாளராக இராசை பரிதிமாலும் மற்றும் 10குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுத்தனர்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி 3-40 முல்லை அச்சகம் சென்னை-6